REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 டிசம்பர் 11 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 293
Monday 11, December, 2023
16 பக்கங்கள்
50/-

அடுத்துவரும் திருத்தத்தின் போது

## எரிபொருள் விலை, மின் கட்டணத்தை குறைக்க அரசாங்கம் எதிர்பார்ப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அடுத்து மேற்கொள்ளப்படவுள்ள திருத்தத்தின் போது எரிபொருள் விலை மற்றும் மின் கட்டணம் ஆகியவற்றை குறைப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் 06

## நாட்டின் கிரிக்கெட்டை அரசியல் தலையீடின்றி பேணுவதே நோக்கம்



2030 இல் கிரிக்கெட் எங்கு இருக்க வேண்டும் என்ற இலக்கு எனக்குள்ளது – ஜனாதிபதி

இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டை அரசியலுக்கு அப்பாற்பட்டு பேணுவதே தமது நோக்கமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2030ஆம் ஆண்டு இலங்கையின் கிரிக்கட் எங்கு இருக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வை தமக்கு இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அதனால் 06

## பெருந்தோட்டத்துறை வாழ் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் திட்டம்

அடுத்த வாரம் விசேட பேச்சுவார்த்தைகள் எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்பும் அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெருந்தோட்டத்துறை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது தொடர்பில் எதிர்வரும் வாரம் முக்கியமான பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

## சர்வதேச நாணய நிதியத்துடன் நாளை முக்கிய கலந்துரையாடல்

அதனையடுத்து 02 ஆவது கடன் தவணை கிடைக்கும்



சர்வதேச நாணய நிதியத்துடன் நாளை டிசம்பர் மாதம் 12ஆம் திகதி முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. அதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையைப் பெற்றுக்கொள்ள முடியுமென வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தவணையைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக இலங்கை, சரியான பாதையில் செல்வதையே காட்டுகிறது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். 06

# நிர்மாணத்துறை ஒப்பந்ததாரருக்கு இம்மாத இறுதிக்குள் ரூ.199 கோடி

கொவிட் 19, பொருளாதார நெருக்கடிகளினால் தடைப்பட்டிருந்த கொடுப்பனவுகள் துரிதகதியில்



நிர்மாணத்துறைக்காக தனியான புதிய அபிவிருத்தி வங்கியொன்றை நிறுவுவதற்கான யோசனையும் முன்வைப்பு

– அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொவிட்19 தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சால் செலுத்த முடியாதிருந்த 1,989.75 மில்லியன் ரூபா பணம் இந்த மாதம் 31 திகதிக்கு முன்னர் செலுத்தப்படுமென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அந்தத் தொகையை செலுத்துவதன் மூலம், கொவிட்19 தொற்று காரணமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செலுத்தாமலிருந்த அனைத்து கட்டணங்களும் முழுமையாக செலுத்தப்படுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக நிர்மாண ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 1,112.57 மில்லியன் ரூபா பணத்தையும் இந்த வருட இறுதிக்குள் முழுமையாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட்19 தொற்று நோய் காரணமாக, இலங்கையின் கட்டுமானத் தொழில் கடுமையான பின்னடைவைச் சந்தித்தது, இதன் காரணமாக, கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதியின் விசேட கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து, இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிதி அமைச்சின் 06

## பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர பிறந்த தின நினைவு அனுஷ்டிப்பு



விஞ்ஞானத் துறையினூடாக இலங்கைக்கு அளப்பரிய சேவையாற்றிய அமரர் பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தரவின் 100 ஆவது பிறந்ததின நினைவை முன்னிட்டு நேற்று (10) அலரி மாளிகையில் நினைவு முத்திரை மற்றும் முதல்நாள் தபால் உறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டன. அமைச்சர் பந்துல குணவர்தன தபால் உறையை ஜனாதிபதியிடம் கையளித்தபோது பிடிக்கப்பட்ட படம். பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

இலங்கையில் சேவைக்காலம் பூர்த்தியடைந்து

## நாடு திரும்புவதற்கு முன்னர் இந்திய உயர்ஸ்தானிகர் பிரதமருடன் சந்திப்பு



இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தனது சேவைக் காலத்தை பூர்த்தி செய்து இந்தியா திரும்புவதற்கு முன்னதாக பிரதமர் தினேஷ் குணவர்தனவை நேற்று (10) அலரிமாளிகையில் சந்தித்தார்.

இலங்கையில் உயர்ஸ்தானிகராக தனது சேவையின் போது இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்த உயர்ஸ்தானிகர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான பிணைப்பு மற்றும் இராஜதந்திர 06

4,000 சுற்றுலாப் பயணிகளுடன்

## கொழும்பு துறைமுகத்தில் மூன்று சொகுசு கப்பல்கள்

பயணிகள் முனையத்துக்கு அமைச்சர் நிமல் கண்காணிப்பு விஜயம்



கொழும்பு துறைமுகத்துக்கு சொகுசு பயணிகள் கப்பல்கள் மூலம் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு துறைமுக வசதிகளை மேலும் விரிவுபடுத்துவதே நோக்கமென துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் 06

பெறுமதி சேர் வரி விவாதத்தின்போது

## கோரம் இன்மையால் நேற்று பாராளுமன்றம் ஒத்திவைப்பு



பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் என்பவற்றின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமானதுடன் பி.ப. 4.30 மணி வரை விவாதம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவினால் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் சபையில் கோரமின்மை தொடர்பில் தலைமை தாங்கும் 06

அரச ஊழியரின் சம்பள முற்பணம் ஜனவரி மாதம் வழங்க தீர்மானம்
பொது நிர்வாக அமைச்சு நேற்று தெரிவிப்பு 03



பொருளாதார மீட்சிக்கான தீர்மானங்களுக்கு
அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒத்துழைப்பு வழங்கத் தயார் 03



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு
திடீர் வாழ்க்கைச் செலவுக்கமைய ரூ. 2,000 சம்பள அதிகரிப்பு அவசியம் 03

மிஹிந்தலையில் கடமையிலுள்ள

## 251 படையினரையும் மீளப்பெறும் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மிஹிந்தலை புனித பூமி பிரதேசத்திலிருந்து இராணுவத்தினர் உள்ளிட்ட 251 பாதுகாப்பு படைவீரர்களையும் மீளப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் இந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் 06

## மோடியை சந்திக்கும் விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் பின்வாங்கல்

கடிதம் தயாரென்கிறார் சி.வி. எம்.பி



தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு உள்ளிட்ட அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்திப்பதற்கு கோரிக்கை விடுக்கும் கடிதம் தயார் நிலையில் இருக்கின்றபோதும் இலங்கை தமிழரசுக்கட்சி உட்பட ஏனைய ஆறு கட்சிகளின் தலைமைகளின் பின்வாங்கலால் அம்முயற்சி 06

## ஏயார் அரேபியா முதலாவது விமானம் இலங்கை வந்தது

கட்டுநாயக்கவில் அமோக வரவேற்பு



அபுதாபியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு புதிய குறைந்த கட்டண விமான சேவையை ஏர் அரேபியா ஆரம்பித்தது.

முதல் விமானம் கடந்த 08 ஆம் திகதி இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

158 பயணிகள் மற்றும் 08 விமான பணியாளர்களைக் கொண்ட ஏர் அரேபியா விமானம் 3L 197, அன்றைய தினம் இரவு 08:00 மணிக்கு 06

## ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு விருது விழா நாளை

ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு விருது வழங்கல் விழா நாளை 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு கல்கிசை ஹோட்டலில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது.

24 ஆவது தடவையாக நடத்தப்படும் இந்த வருடாந்த ஊடகவியலாளர் விருது வழங்கல் விழாவை இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இவ்விழாவில் 36 ஊடகவியலாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன், 16 ஊடகவியலாளர்கள் சான்றிதழ்கள் 06

## வடக்கு ரயில் பாதை புனரமைப்பு ஜனவரி 07 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு கோட்டை – யாழ். K.K.S ரயில் சேவை 06 மாதங்கள் நிறுத்தம்



கொழும்பு, கோட்டையிலிருந்து யாழ். காங்கேசன்துறைக்கான ரயில் சேவை எதிர்வரும் ஜனவரி 07ஆம் திகதி முதல் 06 மாத காலத்துக்கு தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக, ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு ரயில் பாதை புனரமைப்பு திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் மஹவ சந்தி முதல் அநுராதபுரம் 06

## வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் கடும் மழை

காற்றுடன் பெய்யலாமென அறிவிப்பு



வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்யக்கூடுமென சிரேஷ்ட 06

## நாடு முழுதும் திடீர் மின் துண்டிப்பு விரிவான விசாரணைகள் ஆரம்பம்

அமைச்சு மற்றும் CEB மட்டத்தில் முன்னெடுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் மின் துண்டிப்பு தொடர்பாக மின்சார சபை மற்றும் எரிசக்தி, மின்சக்தி அமைச்சு மட்டத்தில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



### தேசிய ஐக்கிய முன்னணி ஏற்பாட்டில்

## முன்னாள் அமைச்சர் அஷ்ரபின் 75ஆவது பிறந்த தின நிகழ்வு



தேசிய ஐக்கிய முன்னணி ஏற்பாட்டில் மறைந்த முன்னாள் அமைச்சர் அஷ்ரப்பின் 75ஆவது பிறந்த தின கொண்டாட்ட நிகழ்வுகள் முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அஷாத் சாலியின் தலைமையில், நாளை (12) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க கலந்துகொள்ளவுள்ளதோடு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இந்நிகழ்வில் விசேட விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தமிழிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசபிரிய சிங்களத்திலும் உரையாற்றவுள்ளார்.

## சிலாபம் தேர்தல் தொகுதியில் விசேட நடமாடும் சேவை

### சுவர்ணபூமி காணி உறுதிகள் ஆளுநரால் கையளிப்பு







**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகமும், புத்தளம் மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த சிலாபம் தேர்தல் தொகுதிக்கான விஷேட நடமாடும் சேவையொன்று சனிக்கிழமை (09) மாதம்பை கருக்குவ சுகதானந்த மஹா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன உட்பட ஆளுநர் செயலக அதிகாரிகளும், இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அலி சப்ரி ரஹீம் உட்பட அரசியல் பிரமுகர்களும், புத்தளம் மாவட்ட செயலக அரச திணைக்கள பிரதானிகளும், அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது, சுவர்ண பூமி காணி உறுதிகள் வழங்கப்பட்டதுடன், இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் அமர்வும் , தொழில் முனைவோருக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

மேலும், பாடசாலை மாணவர்களுக்கான புலமை பரிசுகள், விசேட தேவையுடையவர்களுக்கான உபகரணங்கள், வயோதிபர்களுக்கான மூக்கு கண்ணாடிகள், ஆயுர்வேத மருத்துவ ஆலோசனைகள், வறிய குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் , கர்ப்பிணி பெண்களுக்கான போஷாக்கு உணவுகள் என்பனவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நீருக்குள் மூழ்கியிருந்த நிலையில் 04 கி.கிராம் தங்க பொதி மீட்பு

### புத்தளம் பகுதியில் சம்பவம்



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் களப்பு சிறுகடல் பகுதியில் நீருக்குள் மூழ்கியிருந்த நிலையில் சுமார் 4 கிலோ கிராமுக்கும் அதிகமான தங்கம் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான விஜய கடற்படை கப்பலுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, நேற்று முன்தினம் (09) குறித்த கடற்பகுதியில் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்று நீரில் மூழ்கடிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளமை கடற்படையினரால் அவதானிக்கப்பட்டுள்ளது.

நீரில் மூழ்கி கிடந்த அந்த பார்சலில் மிக நுணுக்கமாக அடைக்கப்பட்டிருந்த நான்கு (04) கிலோவுக்கும் அதிகமான தங்கம் இருந்தமை சோதனையின் தெரியவந்துள்ளது.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள இந்த தங்கத்தை கொண்டுவந்தவர்கள் , பின்னர் எடுத்துச் செல்லலாம் என்ற நம்பிக்கையில் நீருக்குள் மூழ்கடித்திருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

மேலும், இந்த தங்க கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் 27 மற்றும் 35 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## 'ஸூரத்துல் கஹ்பின் ஒளியில்' நூல் வெளியீடு கொழும்பில்





**(தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்)**

கலாநிதி அஷ்ஷெய்க் எம். எம். நயீம், மொழிபெயர்த்த 'ஸூரத்துல் கஹ்பின் ஒளியில்' தமிழ் மொழி மூலமான அல்குர்ஆன் விளக்கவுரை நூல் வெளியீட்டு

விழா கடந்த வியாழக்கிழமை (07) கொழும்பு, தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை நூலாசிரியரின் தாயார் சித்தி பழீலா மொஹிடீனுக்கு நூலாசிரியர் வழங்கி வெளியிட்டு வைத்தமை விசேட அம்சமாகும். நிகழ்வில் ஊக்குவிப்பு முதலீட்டு அமைச்சின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம். நயிமுதீன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

தலைமையுரையை கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என். கபூர்டீனும் நூல் நயவுரையை கலாநிதி ரவூப் ஸெயினும் ஏற்புரையை நூலாசிரியரும் நிகழ்த்தினர்.

மேற்படி நிகழ்வில் உலமாக்கள், புத்திஜீவிகள் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், எம். தௌபீக், நளீமிய்யா பழைய மாணவர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.



## மத்ரஸதுல் ஸலாஹ் அரபுக்கல்லூரிக்கு ஐந்து மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம்

**அஜ்வாத்பாஸி**








பேருவளை சீனன்கோட்டை மத்ரஸதுல் ஸலாஹ் அரபிக்கல்லூரி வளவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள ஐந்து மாடிகளைக்கொண்ட கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று (10) காலை 9.30 மணிக்கு வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்த புதிய மாடிக்கட்டடத்தில் தனியான ஹிப்ழ் பிரிவு, பகுதிநேர வகுப்புகளில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு தேவையான வகுப்பறைகள், மத்ரஸாவின் பிரதான மாநாட்டு மண்டபம் என்பவற்றை உள்ளடக்கிய புதிய வகுப்பறை கட்டட நிர்மாணப்பணிகளுக்கே நேற்றைய தினம் அடிக்கல் நடப்பட்டமை விசேட அம்சமாகும். அண்மையில் வபாத்தான ஸலாஹ் மத்ரஸாவின் நிர்வாக சபைத்தலைவர் மர்ஹூம் எம்.எஸ்.எம். ரஸ்வி ஹாஜியாரினால் மத்ரஸாவிற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 100 பேர்ச் காணியிலேயே ஐந்து மாடிகளைக்கொண்ட புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இக்கட்டடத்திற்கான முதலாவது அடிக்கல்லினை சீனன்கோட்டை பள்ளிச்சங்கத்தலைவர் ஏ.ஆர். எம். முக்தார் ஹாஜியார் மற்றும் மர்ஹூம் ரஸ்வி ஹாஜியாரின் புதல்வர் ரிபாகத் ரஸ்வி ஆகியோர் நட்டி வைத்தனர். இந்நிகழ்வில் மத்ரஸா அதிபர், உஸ்தாத்மார்கள், மத்ரஸா நிர்வாக சபை உறுப்பினர்கள், சீனன்கோட்டை பள்ளிச் சங்க நிர்வாகிகள், மாணவர்கள், ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## பாதிஹ் மாணவர்கள் கௌரவிப்பு




பாதிஹ் கல்வி வளாகத்தில் இரண்டு வருட கற்கை நெறியை பூர்த்தி செய்து வெளியேறிச்செல்லும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் நிறுவன பணிப்பாளர் கலாநிதி அஷ்ஷெய்க் எம். எம். நயீம் தலைமையில் அண்மையில் வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பேராசிரியர் மொகமட் ராஸி, முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் எம் எம் மொகமட், முன்னாள் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எஸ் மொகமட் மற்றும் அஷ்ஷெய்க் அப்துல் ரஹ்மான், அல்ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கொழும்பு தமிழ்ச் சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபத்தில் காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வின் போது காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீனுக்கு கலா பூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் சிறுவர் இலக்கியம் எனும் தலைப்பில் உரை நிகழ்த்திய இராசேந்திரனும் அருகில் காணப்படுகிறார்.

## புத்தளம் கடுமையான் குள பகுதியில் பாரிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய டெங்கு அவதான நிலைமையைக் கருத்திற்கொண்டு புத்தளம் நகர சபை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் பொலிஸார் இணைந்து ஸாலிஹீன் பள்ளி மஹல்லா வாசிகளின், கடுமையான்குளம் பகுதிகளில் பாரிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை (06) மேற்கொண்டனர்.

இதன்போது அதிகாரிகளால் நுளம்புகள் பெருகும் இடங்கள் அடையாளங் காணப்பட்டு அழிக்கப்பட்டதுடன் உரியவர்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

ஸாலிஹீன் மஹல்லா வாசிகளின் வீடுகள் மிகவும் சுத்தமாக காணப்பட்டதுடன் டெங்கு நுளம்புகள், குடம்பிகள் ஒன்றும் காணப்படவில்லை என பரிசோதனைகளில் ஈடுபட்ட சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறே சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு தாழ்மையாக வேண்டிக் கொண்டனர். இதற்கு ஒத்துழைப்பு தந்த அனைத்து மஹல்லா வாசிகளுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

நகரசபை செயலாளர் L.B.G. பிரீத்திகாவின் வழிகாட்டலுடன் நகரசபையின் சுகாதார மேம்பாட்டு பிரிவு அதிகாரிகள் தீவிர அர்ப்பணிப்புடன் டெங்கு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிலாபம் நஸ்ரியா இரண்டாம் இடம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிலாபம் கல்வி வலயத்திற்குட்பட்ட நஸ்ரியா மத்திய கல்லூரி மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பரீட்சைக்குத் தோற்றி தமிழ் மொழி மூலத்தில் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

பரீட்சைக்கு தோற்றிய 83 மாணவர்களுள் 60 மாணவர்கள் உயர்தரம் கற்க தகுதியைப் பெற்று 72.29% சத வீத சித்தியைப் பெற்றுள்ளதாக பிரதி அதிபர் ஏ.எம். அனூஸ் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 டிசம்பர் 11 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : காலை : 7.49 - 9.19வரை
சுபநேரம் : பகல் : 12.19 - 1.49வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# இலங்கை பத்திரிகை பேரவையின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா



இலங்கை பத்திரிகைப் பேரவையின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

ஆண்டு விழாவையொட்டி, "மாத்ய சமீக்ஷா V" புத்தக வெளியீடு, இதழியல் டிப்ளோமா IX குழுவின் சான்றிதழ் வழங்கும் விழா மற்றும் குறைந்த வருமானம் பெறும் ஊடகவியலாளர்களின் குழந்தைகளுக்கான பாடசாலை உபகரணங்கள் விநியோகம் உட்பட பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

"ஊடக முன்னேற்றம் மற்றும் தொழிநுட்பம்: புதிய போக்குகள்" என்ற தலைப்பிலான நிகழ்ச்சியின் பிரதான உரையை மொரட்டுவ பல்கலைக்கழக வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தினேஷ் சமரசிங்க நிகழ்த்தினார்.

நிகழ்வில் அமைச்சின் செயலாளர் அனுச பெல்பிட்ட, இலங்கை பத்திரிகை பேரவையின் தலைவர் மஹிந்த பத்திரன, பத்திரிகை ஆணையாளர் நிரோசன தம்பவிட்ட உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 75ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக கொழும்பிலுள்ள துருக்கி தூதுவர் Demet Sekercioglu வின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஞாபகார்த்த முத்திரை கடந்த 08 ஆம் திகதி ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது . இந்நிகழ்வில் வெளிநாட்டமைச்சர் அலி சப்றியும் கலந்து கொண்டார்.

# அரச ஊழியரின் சம்பள முற்பணம் ஜனவரி மாதம் வழங்க தீர்மானம்

## பொது நிர்வாக அமைச்சு நேற்று தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க ஊழியர்களுக்கு அடுத்த வருடத்திற்காக விசேட சம்பள முற்பணம் ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள முற்பணமாக 4,000 ரூபாவை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. அந்த சம்பள முற்பணத்தை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 29 ஆம் திகதிக்குள் அரசாங்க ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடு தொடர்பில் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் மூலம் அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்வாறு வழங்கப்படும் சம்பள முற்பணத்தை இந்த வருடத்திற்குள்ளேயே மீண்டும் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த சுற்றுநிருபம் மூலம் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை துருக்கிக்கிடையே

# இராஜதந்திர உறவில் 75ஆவது ஆண்டு நிறைவுகொண்டாட்டம்

## 02 விசேட நினைவு முத்திரைகள் வெளியீடு



இலங்கைக்கும் துருக்கிக்குமிடையில் இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் உருவாக்கப்பட்ட இரண்டு விசேட நினைவு முத்திரைகளின் முதல் நாள் தபால் உறைகள் துருக்கிக்கான இலங்கைத் தூதுவர் ஹசந்தி திசாநாயக்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த 08 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இலங்கைக்கு துருக்கிக்கும் இடையேயான 75 வருட பூர்த்தியை முன்னிட்டு இலங்கையிலும் மற்றும் துருக்கியிலும் விசட நினைவு முத்திரைகள் வெளியிடப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் இலங்கைக்கு துருக்கிக்குமிடையே ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி 75 ஆண்டுகள் நிறைவை கொண்டாடும் ஒரு அம்சமாக விசேட முத்திரை வெளியிடப்பட்டது.

துருக்கியின் அங்காராவில் அமைந்துள்ள இலங்கை தூதரக காரியாலயமும் துருக்கி வெளிநாட்டல்கள் அமைச்சும் இணைந்து அங்காராவில் உள்ள இலங்கை தூதரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் முத்திரையை வெளியிட்டன.

இலங்கை மற்றும் துருக்கிக்கான இந்த முக்கியமான மைல் கல்லைக் குறிக்கும் வகையில் இரு நாடுகளுக்காகவும் இலங்கை கலைஞர் ஒருவரால் வடிவமைக்கப்பட்ட விசேட நினைவு முத்திரைகள் மற்றும் சிறப்பு முதல் நாள் அட்டை என்பன கடந்த எட்டாம் திகதி துருக்கியிலும் இலங்கையிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது.

அங்காராவில் முத்திரையுடன் கூடிய முதல் நாள் அட்டை துருக்கி தபால் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் Menderes Pinarbasi மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் வெளிநாட்டு அபிவிருத்தி மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் திணைக்களத்தின் தலைவர் Murat Dikman ஆகியோரால் தூதுவர் ஹசந்தி திஸாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

'200இல் மலையகம் சாதனையை நோக்கி'

# நுவரெலியா சினிசிட்டா அரங்கில் 24 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இம்மாதம் 24ஆம் திகதி நுவரெலியா சினிசிட்டா அரங்கில் நடைபெறவுள்ள '200ல் மலையகம் சாதனையை நோக்கி' எனும் மாபெரும் நிகழ்வுக்கான விசேட கலந்துரையாடல் மலையக மக்கள் முன்னணிக்கும் கொழும்பு வர்த்தகர்களுக்குமிடையில் நடைபெற்றது.

மலையக மக்கள் முன்னணியின் வெளிநாட்டு விவகார செயலாளர் எச். எச்.விக்கிரமசிங்க ஏற்பாட்டில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்டபாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி ராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் 200ல் மலையகம் சாதனையை நோக்கி எனும் நிகழ்வு எவ்வாறு நடைபெறப்போகின்றது அந்நிகழ்வில் மலையகத்திலிருந்து கொழும்பில் வர்த்தகம் செய்யும் வர்த்தகர்களின் பங்கு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் நாட்டின் அபிவிருத்திக்கு முதுகெலும்பாக பெருந்தோட்ட துறை தொழிலாளர்கள் காணப்படுவது போல தோட்டப்பகுதிகளின் அபிவிருத்திக்கு மலையகத்திலிருந்து கொழும்புக்கு சென்றும் பணிப்புரியும் இளைஞர்களே காரணம் எனவே தான் கொழும்பை சார்ந்த வர்த்தகர்களுடனான கலந்துரையாடலை மேற்கொண்டதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் ராதாகிருஸ்ணன் குறிப்பிட்டார். இக்கலந்துரையாடலின் மூலம் 200ல் மலையகம் நிகழ்வுக்கு கொழும்பில் வர்த்தக நிலையங்களில் பணிப்புரியும் பணியாளர்களுக்கு விடுமுறை வழங்குவதாகவும் இக்கலந்துரையாடலில் வர்த்தகர்கள் ஏற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வேலுசாமி ராதாகிருஸ்ணன், மலையக தொழிலாளர் முன்னணியின் பதில் பொதுச்செயலாளர் புஸ்பா விஸ்வநாதன்,மலையக மக்கள் முன்னணியின் சிரேஸ்ட உபதலைவர் முனைவர் சிவலிங்கம் சதீஸ்குமார் மலையக மக்கள் முன்னணியின் வெளிநாட்டு விவகாரங்களின் செயலாளர் எச். எச்.விக்கிரமசிங்க ஜி.ஜெகநாதன் உட்பட கொழும்பு வர்த்தகர்கள் கலந்துக் கொண்டனர்.



சர்வமத தலைவர்கள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை அண்மையில் அவரது இல்லத்தில் சந்தித்து சமய சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். மேலும் ONUR சபை அமைப்பினூடாக நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடலின் பின் எடுத்துக்கொண்ட படம்.



கொழும்பு, மாளிகாவத்தை கார்ல்டன் பாலர் பாடசாலையின் வருடாந்த கலைக் கண்காட்சி நிகழ்வு கடந்த 6ஆம் திகதி ருமேனிய தூதுவரின் துனைவியார் திருமதி. Mrs. Chiujdea தலைமையிலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் துனைவியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவின் பங்குபற்றுதலில் நடைபெற்றது. முன்பள்ளி மாணவியொருவர் பிரதம அதிதிக்குமலர்ச் செண்டு வழங்கி வரவேற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு

# திடீர் வாழ்க்கைச் செலவுக்கமைய ரூ.2,000 சம்பள அதிகரிப்பு அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வாழ்க்கை செலவின் திடீர் அதிகரிப்புக்கு மத்தியில் பெருந்தோட்ட மக்களுக்கு 1,000 ரூபா சம்பளம் என்பது சாத்தியமற்றது. நாளாந்த சம்பளம் 2,000 ரூபாவாக வழங்கப்பட வேண்டும்.

உரம் தொடர்பில் கடந்த அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானத்தால் ஏற்பட்ட விளைவுகளை குறுகிய காலத்துக்குள் சீரமைக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (09) நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் விவசாயத்துறை மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

நெற்பயிர்ச்செய்கை உட்பட மரக்கறி, பழ வகை பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் உர பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதிய வரி கொள்கையில் விவசாய உபகரணங்களை உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமானால், உற்பத்தி செலவுகளை குறைக்க வேண்டும். ஆகவே விவசாய பொருட்களுக்கு வற் வரி விதிப்பை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கடந்த அரசாங்கம் விவசாயத்துறை தொடர்பில் எடுத்த தவறான

06

பொருளாதார மீட்சிக்கான தீர்மானங்களுக்கு

# அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

## ஹர்ஷ டி சில்வா

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் சிறந்த தீர்மானங்களுக்கு அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம் பி ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும் முறையான தரப்படுத்தல்களுக்கமைவாக தீர்மானங்களை மேற்கொள்வதை தவிர்த்து அரசாங்கம் தன்னிச்சையாக செயற்படுமானால் அவற்றுக்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கமையவே வற் வரியை அதிகரிப்பதாக குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ளமுடியாதுஎன்பதை சபையில் சுட்டிக் காட்டிய அவர்,பொது போக்குவரத்து ,கல்வி,சுகாதாரம் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது வரி விதிக்க வேண்டாம் என நாணய நிதியம் குறிப்பிட்டுள்ள போதும் திரிபோஷ, முட்டை உட்பட உணவுப் பொருட்களுக்கு வரி விதிக்

06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 25ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 25

## குறள் தரும் சிந்தனை



கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
இரப்புமோ ரேஎர் உடைத்து

உள்ளதை ஒளிக்காத உள்ளமும், கடமையுணர்வும் கொண்டவரிடத்தில் தனது வறுமை காரணமாக இரந்து கேட்பதும் பெருமையுடையதேயாகும்.

# திடீர் மின்தடைக்கான காரணம் கண்டறியப்படுவதன் அவசியம்

இலங்கையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் திடீரென மின்தடை ஏற்பட்டது. சில மணித்தியாலயங்கள் நீடித்த இம்மின்தடைக்கு முழு நாடும் முகம்கொடுத்தது. முழுநாடும் ஒரே நேரத்தில் இம்மின் தடைக்கு முகம்கொடுத்ததன் காரணத்தினால் பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தினர். அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

அன்றைய தினம் பிற்பகல் 5.10 மணியளவில் ஏற்பட்ட இம்மின்தடை கட்டம் கட்டமாக சீர்செய்யப்பட்டு இரவு 11 மணியளவில் முழு நாட்டினதும் மின்விநியோகம் வழமை நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் நிமித்தம் மின்பொறியியலாளர்களும் இலங்கை மின்சார சபை ஊழியர்களும் கடும் முயற்சி எடுத்துக் கொண்டனர். அவர்களது அர்ப்பணிப்புமிக்க பணி பாராட்டப்பட வேண்டியதாகும்.

சுமார் 5 மணித்தியாலயங்கள் நீடித்த மின்தடையினால் நாட்டின் பல்வேறு துறையினரும் பல விதமான அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். குறிப்பாக நாட்டின் இயல்பு நிலையே பாதிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் மின்சக்தி என்பது இன்றைய கால கட்டத்தில் மிக முக்கிய அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகும். குறிப்பாக உற்பத்திகள் மற்றும் சேவைகள் துறையின் முக்கிய இயங்குசக்தியாகவும் மின்சக்தியே திகழுகிறது. அதனால் மின்சக்தி இல்லாவிடில் நாடே ஸ்தம்பிதமடைந்து விடக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. இச்சேவை மக்களுக்கும் ஏனைய அனைத்துத் துறைகளுக்கும் சீராகவும் தொடராகவும் கிடைக்கப்பெற வேண்டும். அதுவே அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும். அதற்கு ஏற்ப இலங்கை மின்சார சபையின் ஊடாக சேவைகள் வழங்கப்படுகின்றன.

ஐந்து மணித்தியாலயங்கள் ஏற்பட்ட இத்திடீர் மின்தடையினால் மக்களது இயல்பு வாழ்வு மாத்திரமல்லாமல் பல்வேறு உற்பத்தி கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையிலும் தாக்கங்கள் ஏற்பட்டன. சில தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் மின்தடையோடு இடைநிறுத்தப்பட்டன. தேசிய மின்சக்தியைப் பயன்படுத்தும் அனைத்து இயந்திர சாதனங்களது செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்தன. அதன் விளைவான பொருளாதார பாதிப்புக்களும் குறைத்து மதிப்பிடக் கூடியவையாக இராது.

அதனால் இலங்கை போன்ற வளர்முக நாடொன்றில் திடீரென்று ஏற்படும் மின்தடை ஐந்து மணித்தியாலயங்கள் நீடிப்பது பொருளாதார தாக்கங்களுக்கு நிச்சயம் பங்களிக்கவே செய்யும். அதனால்தான் இம்மின்தடைக்கான காரணம் உரிய முறையில் கண்டறியப்பட வேண்டியதன் அவசியம் பரவலாக உணரப்பட்டிருக்கிறது. இப்பின்னணியில்தான் ஒரே நேரத்தில் முழுநாடும் திடீர் மின்தடைக்கு உள்ளாமை பல்வேறு மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றிருக்கின்றது.

அதேநேரம், இம்மின் தடைக்கான காரணத்தைக் கண்டறிவதன் ஊடாக எதிர்காலத்தில் இவ்வாறான திடீர் மின்தடைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அத்தோடு இவ்வாறான மின்தடைகள் ஏற்படுமாயின் அவற்றின் ஊடாக ஏற்படக் கூடிய பாதிப்புக்களை, குறிப்பாக பொருளாதார பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளவும் வழி கிடைக்கப்பெறும்.

இந்நாட்டுக்குத் தேவையான மின்சக்தி நீர், காற்று, நிலக்கரி, சூரியன், திரவ எரிபொருள் ஆகிய மூலங்களைக் கொண்டு பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்த அனைத்து மூலங்கள் மூலமும் கிடைக்கப்பெறும் மின்சக்தி தனித்தனி கட்டமைப்புக்கள் ஊடாக தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்படும் ஒழுங்கு காணப்படுகின்றது. அதனால் ஒரு பகுதியில் அல்லது ஒரு கட்டமைப்பில் ஏற்படும் பாதிப்பு அல்லது கோளாறு முழு நாட்டுக்குமான கட்டமைப்புக்களில் பாதிப்பை ஏற்படுத்துமா? என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் நிலவவே செய்கிறது.

இந்த நிலையில்தான் இலங்கை மின்சார சபை, 'இத்திடீர் மின்தடைக்கு கொத்மலை முதல் பியகம வரையிலான மின் விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணம்' எனத் தெரிவித்துள்ளது. இதேவேளை, மின்சக்தி, எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த, இத்திடீர் மின்தடை தொடர்பில் இரு வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்து இருக்கிறார். இது வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

ஏனெனில் முழு நாட்டிலும் ஒரே நேரத்தில் திடீர் மின்தடை ஏற்பட்டமைக்கான சரியான காரணம் கண்டறியப்படும் போது எதிர்காலத்தில் இவ்வாறான மின் தடைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இன்றைய தேவைகளில் அதுவும் ஒன்று என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவின் முதன்மையான கலைநயமிக்க இலக்கிய நகரம் கேரளத்தின் கோழிக்கோடு



அண்மையில் நான் கேரள மாநிலம் கோழிக்கோட்டுக்கு சென்றிருந்தேன். இங்கு வாழும் பிரபல மலையாள எழுத்தாளர் உள்ளூர் பரமேஸ்வரனை சந்திப்பதற்காகச் சென்றேன். இவர் திருவாசகம், திருப்பாவை, பாரதியார் கவிதைகள், திருக்குறள் போன்றவற்றை தமிழிலிருந்து மலையாளத்திற்கு மொழிபெயர்த்துள்ளார்.

திருவாசகம், திருப்பாவை பொழிபெயர்ப்புக்காக இவருக்கு சாகித்திய அக்கடமி விருதும், நல்லி திசை எட்டும் இலக்கிய விருதும் வழங்கப்பட்டுள்ளன. கோழிக்கோட்டிலிருந்து இவரைப் போலவே பல எழுத்தாளர்கள் உருவாகியிருக்கிறார்கள்.

கோழிக்கோடு கடற்கரையுடன் கூடிய அழகிய நகரம். மலையாளத்தில் முக்கியமான இலக்கிய நகரமாகவும் திகழ்கிறது. பழைமையைப் பாதுகாத்து புதுமையை வரவேற்கும் கோழிக்கோடு நகரம் எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் நகரமாகவும் விளங்குகிறது

நகரின் பல பகுதிகளில் எழுத்தாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தையும் காணமுடிகிறது. நகரின் நடுப்பகுதியில் உள்ள மிட்டாய் கடைத் தெரு என்ற எஸ்.கே தெருவில் நாடக ஆசிரியரும், இயக்குநருமான எஸ்.கே. பொற்றேகாடு என்ற நாடகக்கலைஞருக்கு மார்பளவில் சிலை வைத்து பெருமைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அந்தப்பகுதியில் இவர் இயக்கிய நாடகங்களின் கதாபாத்திரங்களையும் ஓவியங்களாக தீட்டி வைத்துள்ளனர்.

பொற்றேகாடு காலத்தில் இங்குதான் பல நாடகக்கலைஞர்கள் ஒன்றுகூடி கதைகள் பற்றி விவாதித்து நாடகங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதன் அடையாளமாக இங்கே சிமெந்தினால் இருக்கைகளையும் வடிமைத்து வைத்துள்ளனர். இன்று இந்த இருக்கைகளில் மக்கள் உட்கார்ந்து ஓய்வெடுக்கிறார்கள்.

கோழிக்கோட்டின் கடற்கரைப்பகுதி மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சுற்றுச்சுவர்களில் மலையாள எழுத்தாளர்களின் உருவங்களை வண்ண ஓவியமாக தீட்டிவைத்துள்ளனர்.

வைக்கம் முகம்மது பசீர், எம்.டி வாசுதேவனார், குதிரை வட்டம் பாபு போன்ற எழுத்தாளர்களின் ஓவியங்களையும் அவர்கள் எழுதிப் புகழ்பெற்ற கதைகளின் கதாபாத்திரங்களையும் வண்ண ஓவியமாக தீட்டியுள்ளனர்.

இதேபோல மலையாளத்தில் புகழ்பெற்ற இசையமைப்பாளரும், பாடலாசிரியருமான பாபு ராஜின் ஓவியமும் தீட்டப்பட்டுள்ளது.

இந்த ஓவியங்களை மக்கள் பார்க்கும் போது அந்தக் கலைஞர்களை யார் என்று தெரிந்துகொள்ளவும் மறக்காமல் இருப்பதற்கும், வளர்ந்துவரும் தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தவும் பயனுள்ளதாக இருக்கிறது என்றே சொல்லலாம்.

கோழிக்கோட்டுக்கு இன்னொரு சிறப்பும் தற்போது கிடைத்துள்ளது. உலக நகரங்கள் தினத்தை முன்னிட்டு யுனெஸ்கோ 55 நகரங்களை அடையாளப்படுத்தியது. அதில் கோழிக்கோட்டை இந்தியாவின் முதல் இலக்கிய நகரமாக அறிவித்துள்ளது. படைப்பாற்றல் மற்றும் கலாசார வளர்ச்சியில் கோழிக்கோடு முன்னிலையில் இருப்பதாலும், 500 இற்கும் மேற்பட்ட நூலகங்கள், 70 இற்கும் மேற்பட்ட பதிப்பகங்கள் இருப்பதாலும் வருடாந்த கேரள இலக்கியத்திருவிழாவும், புத்தகத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறுவதாலும், இந்நகரத்தை சிறந்த இலக்கிய நகரமாக தெரிவு செய்ததாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது. கோழிக்கோட்டுக்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால் 1498 ஆம் ஆண்டு வாஸ்கொடகாமா கடல்வழியாக வந்து காப்பாடு என்ற கடற்கரையில் கால்பதித்துள்ளார். கோழிக்கோட்டிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் காப்பாடு கடற்கரை அமைந்துள்ளது. வாஸ்கொடகாமா இங்கே வந்து இறங்கியதின் நினைவாக ஒரு கல்தூணும் வைக்கப்பட்டுள்ளது.

கடற்கரை ஓரத்தில் கடல் அலைகள் வரவேற்கும் கலைநயம் மிக்க நகரமாக விளங்கும் கோழிக்கோட்டில் பார்க்க வேண்டிய இடங்கள் இன்னும் நிறைய இருக்கின்றன.

அண்மையில் நான் பார்த்த இடங்களையும் என் கவனத்திற்கு வந்த அனுபவங்களையும் மட்டுமே இங்கே பதிவு செய்துள்ளேன். நீங்களும் ஒருமுறை கோழிக்கோட்டுக்கு சுற்றுலா வந்தால் மனதைக் கவரும் இடங்களைப் பார்க்கலாம்.

**நந்தவனம் சந்திரசேகரன்**
இந்தியா







# பேராசிரியர் செ. யோகராசாவின் மறைவு தமிழ்த்துறைக்கு நிரப்ப முடியாத இழப்பு

## காத்தான்குடி பிரதேச செயலகத்தில் அனுதாபம்



ஓய்வுநிலைப் பேராசிரியர் செ. யோகராசா அவர்களது மறைவுச் செய்தி மனதைப் பிழிகின்றது. அவர் பட்டி தொட்டி எல்லாம் தமிழ் மணக்கும் விழாக்களில் பங்கேற்றவர், சிறந்த சிந்தனையாளர், தமிழ் ஆய்வாளர் ஆவார். இலக்கிய இமயம் என்ற பன்முக ஆளுமையின் இழப்பு தமிழ்த்துறைக்கு இலகுவில் நிரப்பிக் கொள்ள முடியாத இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

இனமதபேதமின்றி நீண்ட நட்புறவோடு பல்வேறு இலக்கிய விழாக்கள், நூல் வெளியீடுகள், கவிதைப் புத்தகங்களுக்கான முன்னுரைகள் என்றெல்லாம் காத்தான்குடியின் இலக்கியப்பரப்பில் கலந்திருந்த தமிழ்துறை ஆளுமை செ .யோகராசா அவர்களின் மறைவு வேதனை தருகின்றது.

இவ்வாறு காத்தான்குடி கலாசார அதிகார சபைச் செயலாளர் கவிஞர் இல்மி அஹமட் லெப்பை தெரிவித்தார்.

பிரதேச செயலாளர் யூ. உதயசிறிதர் தலைமையில் கலாசார உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட நிர்வாக அமர்வில் பேராசிரியர் செ. யோகராசா மறைவு தொடர்பான அனுதாப முன்மொழிவை காத்தான்குடி பிரதேச செயலக கலாசார அதிகாரசபை ஏகமனதாக நிறைவேற்றியது.

அன்னாரின் மறைவு தொடர்பாக ஆழ்ந்த இரங்கலை அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்வதாக கலாசார அதிகார சபைச்செயலாளர் கவிஞர் இல்மி அஹமட் லெப்பை தெரிவித்தார்.

# கொழும்பில் எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச நீர்மாநாடு

## நீர்சார் துறையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து ஆராய்வு



2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச நீர்மாநாடு இம்மாதம் 14, 15 ஆம் திகதிகளில் அமைச்சின் நீர் மற்றும் சுகாதாரத்திற்கான மேம்பாட்டு மையத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நீர்சார் துறைகளில் நிலவும் பிரச்சினைகள், புதுப்பிக்கத்தக்க சக்தியை நீர்வளத் துறைக்கு எவ்வாறு பயன்படுத்துவது, நீர் வழங்கலின் போது நவீன தொழில்நுட்ப பயன்பாடு, தற்போதைய சூழ்நிலைக்கேற்ப எவ்வாறு கொள்கைகளை மாற்றியமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் மாநாட்டில் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மழைநீர் மூலம் பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கான பொறிமுறை பற்றியும் ஆராயப்படும். சர்வதேச நீர் மாநாட்டில் பங்கேற்கும் துறைசார் நிபுணர்கள் மற்றும் புத்திஜீவிகளிடமும் இது சம்பந்தமாக ஆலோசனைகள், கருத்துக்களை கேட்டறிந்து சுத்தமான, சுகாதார பாதுகாப்புடைய குடிநீரை வழங்குவதே மாநாட்டின் பிரதான நோக்கமாகும். மேலும் நீர் வீண்விரயத்தைத் தடுப்பதற்கான, கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சம்பந்தமான வழிகாட்டல்களும் முன்வைக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நீர் என்பது உயிரின் ஆதாரமாகும். அனைத்து இயற்கை வளங்களுக்கும் மனிதவளத்திற்கும் ஆதாரம் நீர் ஆகும். முன்னைய காலங்களில் தூய நீருக்கான பற்றாக்குறை ஒரு போதும் இருந்ததில்லை. ஆனால் தூயநீரின் வளம் உலகில் மிக வேகமாக குறைந்து கொண்டு செல்வது அவதானிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய போக்கு கட்டுப்படுத்தப்படாது போகுமானால் எதிர்காலத்தில் விவசாயம் மற்றும் மனிதனின் தனிப்பட்ட பாவனைக்கான தூயநீருக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்படலாம்.

மனிதனின் செயற்பாடுகளே தூயநீருக்கான பற்றாக்குறைக்குக் காரணமென நீரியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். காடுகள் மெருமளவில் அழிக்கப்படுதல், நீர் மாசடைதல், நீரின் அதிகரித்த பாவனை ஆகியனவே தூயநீருக்கான பற்றாக்குறை அதிகரிக்கக் காரணமென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மனித செயற்பாடுகளின் விளைவினால் புவி உஷ்ணமடைந்து செல்வதால் பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயருகிறது. இதனால் கடல்நீர் புவியினுள் பிரவேசிப்பதன் விளைவாக தூய நீரின் வீதம் குறைந்து கொண்டே செல்கிறது. இது போதாதென்று மறுபுறத்தில் இரசாயனப் பதார்த்தங்களின் பாவனையினால் தூயநீர் படிப்படியாக மாசடைந்து செல்கிறது.

உலகில் 70 வீத பரப்பளவு நீர் இருந்தாலும் அதில் 97.5 வீதம் கடலில் இருக்கும் உவர் நீர்தான். மிகுதி 2.5 வீத அளவுக்குத்தான் நிலத்தடி நீர் உள்ளது. இதிலும் 2.24 வீதம் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகளாகவும் பனித்தரையாகவும் மாறிப் போயுள்ளது. எஞ்சிய 0.26 வீத நீரைத்தான் உலக மக்களனைவரும் பகிர வேண்டும். அண்மைய புள்ளிவிபரங்களின்படி உலகளவில் 250 கோடி மக்கள் போதியளவு சுத்தமான நீரை அல்லது நீர்வளத்தை அனுபவிக்க முடியாத நிலையிலுள்ளனர். அவர்களில் 70 சதவீதத்தினர் ஆசிய நாடுகளிலேயே உள்ளனர். நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டியதும் நீர் ஆதாரங்களைக் காக்க வேண்டியதும் மனித சமுதாயத்தின் தார்மிகக் கடமையாகும்.



**கலாபூஷணம் பரீட் இக்பால்**
யாழ்ப்பாணம்

# ஹதீஸ் துறைக்கான மன்னர் சல்மான் மத்திய வளாகம்

இரண்டு புனிதஸ்தலங்களின் சேவகர், மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆலு ஸுஊத் அவர்களின் பணிப்புரையின் கீழ் 2017ம் ஆண்டு மதீனா மாநகரில் உருவாகிய பிரமாண்டமான திட்டம்தான் ஹதீஸ் துறைக்கான மன்னர் சல்மான் மத்திய வளாகமாகும்.



குர்ஆனிய கலைகளையும் ஸுன்னாவோடு தொடர்பான துறைகளையும் பாதுகாப்பதற்கும் பரப்புவதற்குமான சவூதி அரசின் உயர்முயற்சிகளில் ஒன்றாக இப்பாரிய திட்டம் கருதப்படுகின்றது.

உலகின் நாலாபாகங்களிலும் வஹீயின் ஒளியை பாய்ச்சும் முக்கியமான நிலையமாகவும், புனித ஹதீஸ் நூற்களுக்கு நம்பகரமான உசாத்துணையாகவும் இது விளங்கும். அல்குர்ஆனுக்கு அடுத்ததாக மார்க்க சட்டத்துறையின் இரண்டாவது மூலாதாரமாக அல்ஹதீஸ் திகழ்வதால் அதனைப் பாதுகாப்பதன் மூலம் இஸ்லாமிய ஷரீஆவுக்கு சேவை செய்யும் சவூதி அரசின் பயணம் தொய்வின்றி தொடர்வதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

உலகின் தலைசிறந்த உலமாக்கள் குழுவின் மேற்பார்வையில் இயங்கும் இவ்வளாகத்தின் தலைவராக அஷ்ஷெய்க் முஹம்மது பின் ஹஸன் ஆலுஷ் ஷெய்க் அவர்கள் செயற்படுகிறார்.

இஸ்லாத்தின் இரண்டாவது மூலாதாரமான சுன்னாவை ஒன்று சேர்த்தல், அது சார்ந்த கலைகளை வகைப்படுத்தல், ஆய்வு செய்தல், மற்றும் வெளியிடுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் சேவை செய்தல் போன்றன இதன் நோக்கங்களாகும். பகுத்தறிவு ரீதியான அத்துமீறல்களில் இருந்து நபியின் சுன்னாவைப் பாதுகாத்தல், இஸ்லாத்தின் நடுநிலை கருத்துகளை ஊக்குவித்தல் ஆகியனவும் நோக்கங்களாகும்.

இதன் செயற்பாடுகள் வருமாறு:

ஆதாரபூர்வமான ஹதீஸ்களை சேகரித்தல், சரிபார்த்தல் மற்றும் ஆவணப்படுத்துதல். மற்றும் பல மொழிகளில் வெளியீடு செய்தல். ஹதீஸ்களுக்குரிய விரிவான, அனைத்தையும் உள்ளடக்கிய அகராதிகளை தயாரித்தல். ஹதீஸ் துறைகள் பற்றிய மாநாடுகள், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்.

ஹதீஸ் துறைகளில் நடத்தப்படும் உள்ளூர் மற்றும் சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகளில் பங்கேற்றல், ஹதீஸ் கலையில் போட்டிகளை நடத்துதல், ஹதீஸ் மற்றும் அதனது துறைகளுடன் சம்பந்தப்பட்ட வாசிகசாலைகளை உருவாக்கல்.

இவ்வளாகம் முஸ்லிம்களுக்கும் , குறிப்பாக உலமாக்கள் சிந்தனையாளர்களுக்கும் ஸுன்னாவோடு தொடர்பான அனைத்து விடயங்களுக்குமான நம்பகத்தன்மை வாய்ந்த கேந்திர நிலையமாக இருக்குமென்பது நவீன கால அறிஞர்களின் கருத்தாகும்.

ப்ரேஸில் நாட்டின் இஸ்லாமிய விவகாரங்கள் மற்றும் இமாம்களுக்கான அதி உயர்பீடத்தின் தலைவர் கலாநிதி அப்துல் ஹமீத் முதவல்லி கூறும் போது "தூய ஸுன்னாவை கற்பித்தல், ஆய்வு செய்தல், மற்றும் மேலாய்வு, திறனாய்வு ரீதியாக அணுகுவதற்கான தளமாக இது இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளதுடன் இப்பாரிய திட்டத்திற்கு சவூதி அரேபியா அணுசரனை வழங்குகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மார்க்கத்தையும் அதனது மூலாதாரங்களையும் பாதுகாப்பதற்கான சவூதி அரேபியாவின் வகிபாகமும் முயற்சிகளும் பாராட்டத்தக்கவை.



**ஜே. எஸ்.எம். அஷ்ரப்**
விரிவுரையாளர்,
தாருத் தௌஹீதிஸ் ஸலபிய்யா கலாபீடம்

# தண்டியடிகள் நாயனார்



144

இந்தச் சிவதொண்டின் பெருமை உங்களுக்குத் தெரியவருமோ' என்றனர். சமணர்கள் அவரை நோக்கி, 'சிந்தித்து இந்த அறத்தினைக் கேளாத நீ செவியும் இழந்தனையோ' என்று இகழ்ந்துரைத்தனர். அதுகேட்ட தண்டியடிகள் 'மந்த உணர்வும், விழிக்குருடும், கேளாச்செவியும் உமக்கே உள்ளன. நான் சிவனுடைய திருவடிகளை அல்லால் வேறு காணேன்; அதனை அறிவதற்கு நீர் யார்? உங்கள் கண்கள் குருடாகி உலகெலாம் காண யான் கண்பெற்றால் நீர் என்ன செய்வீர்? என்றார். அதுகேட்ட சமணர், 'நீ உன் தெய்வத்தருளால் கண் பெற்றாயாகில் நாங்கள் இந்த ஊரில் இருக்கமாட்டோம்' என்று சொல்லி அவர் கையிலுள்ள மண்வெட்டியைப் பறித்து நட்டதறிகளையும் பிடுங்கி எறிந்தனர்.

தண்டியடிகள் ஆரூர்பெருமான் முன் சென்று 'ஐயனே! இன்று அமணர்களால் அவமதிக்கப்பட்டு வருந்தினேன். இவ்வருத்ததைத் தீர்த்தருள வேண்டும்;' என முறையிட்டுத் தமது மடத்திற்குச் சென்றனர். இன்று பணிசெய்ய முடியவில்லையே என்ற வருத்தத்தால் அழுதுகொண்டு துயின்றார். அன்றிரவு ஆரூரிறைவர் அவரது கனவில் தோன்றி, 'தண்டியடிகளே உன் மனக்கவலை ஒழிக! உன் கண்கள் காணவும், சமணர்கள் கண்கள் மறையுமாறும் செய்கின்றோம்' என்று அருளிச் செய்து, சோழ மன்னர் கனவில் தோன்றி 'தண்டி என்பவன் நமக்குக் குளந்தோண்ட அதற்குச் சமணர்கள் இடையூறு விளைவித்தனர்.



கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# சொர்ண மழை பொழிய திருமகளின் அருள் தேவை

பணம் பந்தியிலே குணம் குப்பையிலே, பணம் இல்லாதவன் பிணத்திற்கு சமமாவான், காசசேதான் கடவுளடா, அருள் இல்லார்க்கு அவ்வுலகு இல்லை, பொருள் இல்லாருக்கு இவ்வுலகு இல்லை, பணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்ற இத்தகைய சொற்றொடர்கள் மக்கள் மத்தியில் ஏராளமாக இருக்கிறன. இதற்கு காரணம் பணம் இருந்தால் தான் எதையும் சாதிக்க முடியும் வாழ முடியும் என்ற நிலை இருக்கிறது.



இறைவனின் அருளை தாய்மையின் பாசத்தை உடலின் ஆரோக்கியத்தை தவிர்த்து மற்ற அனைத்தையுமே பணம் இருந்தால் மட்டும் தான் மனிதர்கள் பெற முடியும். அனுபவிக்க முடியும். ஆனால் உலக நியதி மனிதர்கள் கையில் தேவைக்கு ஏற்ற பணம் எப்போதுமே நிலையில்லாமல் இருந்து வருகிறது. நேற்று இருந்த செல்வம் காலையில் கண்விழித்தால் காணமல் போய் விடுகிறது.

மனிதன் தனது வாழ்நாளில் பெரும் பகுதி பணத்தை தேடியே ஓடுகிறான். அப்படி ஓடினாலும் கூட எத்தனை பெயரால் பணத்தை பெறமுடிகிறது?

வறுமை, பஞ்சம், பசி, பட்டினி என்பவைகள் முன்பை போல நேரடியான கோரதாண்டவம் ஆடவில்லை என்றாலும் ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையில் தனிப்பட்ட அனுபவத்தில் தினம் தினம் நிகழ்ந்து கொண்டே தான் இருக்கிறது.

இந்த நிலையிலிருந்து மாற்றி மனிதன் செல்வத்தை அடைவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று யோசித்தால் நமது முன்னோர்கள்சரியானஇறைவழிபாட்டின்மூலமே நிறைவான செல்வத்தை பெறமுடியும் என்கிறார்கள். செல்வத்தின் அதிபதியான திருமகளின் அருளைப் பெற பாடுபடு நிச்சயம் உன் வாழ்வில் சொர்ண மழை பொழியும் என்கிறார்கள். திருமகளை எப்படி வழிபட்டு பூரணமான அருளை சாதாரண மனிதர்கள் பெற இயலும் ?

பிள்ளைகள் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, வேலை பிரச்சினை, சமூக பிரச்சினை என்று எத்தனையோ பிரச்சினைகளில் சிக்கி தவிக்கும் சாதாரண மக்கள் தங்களது நேரத்தையும் காலத்தையும் ஒதுக்கி மன ஒருநிலைப்பாட்டுடன் முறைப்படியான மந்திரங்களை உருவேற்றி பூஜைகள் செய்து மகாலஷ்மியின் அருள்பிரசாதத்தை பெறமுடியும் சாதாரண மனிதர்களால் அது இயலாது என்பதனால் தான் அருளாளர்களையும் ஞானிகளையும் துறவு வாழ்க்கை மேற்கொண்ட மகாபுருஷர்களையும் இறைவன் நமக்கு காட்டி தந்திருக்கிறான்.

மார்கழி மாதம் என்பது தேவர்களின் காலை பொழுது இந்த மாதத்தின் தேவர்களின் வாழ்க்கை மட்டும் விடிவை நோக்கி போவதில்லை. மனிதர்களின் வாழ்க்கையும் வாக்கும் கூட புதிய விடியலை நோக்கி நகர்ந்து செல்லும். மார்கழி மாதத்தின் செய்யப்படுகிற பூஜைகள், பரிகாரங்கள், தியானங்கள், தவங்கள் எல்லாமே இறைவனின் அருளால் வெற்றிவாகையை சூடிதருவதனால் தான் பகவான் கிருஷ்ணன் மாதங்களில் நான் மார்கழி என்று சொல்கிறான்.

சைவ மஞ்சரி





திருகோணமலை, அலஸ்தோட்டம், ஸ்ரீ நாகம்மாள் அறநெறிப்பாடசாலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்குருபூசை நேற்று நடைபெற்றது. நல்லூர் சிவன்குரு ஆதீனத்தின் தவத்திரு பாலன் சுவாமிஜீ அடிகளார் இதில் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றினார். இதனை இந்த அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாசிரியர் திருமதி தர்ஷி கோமதி தெரிவித்தார்.

# அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் நடாத்தும் ஆடற்கலைப் போட்டி

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன், அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், இந்து கலாசாரத் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் ஆடற்கலையின் போட்டியின் கம்பஹா மாவட்டத்திற்கான போட்டி அண்மையில் மத்திய கொழும்பு இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் வத்தளை ஐயப்பன் சபரி அறநெறி பாடசாலை வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

**கொழும்பு ஆடற்கலைப்போட்டி 17ஆம் திகதி**

கொழும்பு மாவட்டத்திற்கான போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கொட்டாஞ்சேனை, மத்திய கொழும்பு இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கொழும்பு ஜயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய அறநெறி பாடசாலை, நவகம்புர சங்கத்தமிழ் இந்து மன்றத்தின் வள்ளுவர் அறநெறி பாடசாலை, கொழும்பு முகாத்துவாரம் விஷ்ணு ஆலய அறநெறிப் பாடசாலையுடன் நான்கு பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

**வவுனியா, முல்லைத்தீவு ஆடற்கலைப்போட்டி 16ஆம் திகதி**

வவுனியா மாவட்டத்திற்கான போட்டியும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான போட்டியும் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது. இங்கு 18 அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

**கண்டி ஆடற்கலைப்போட்டி 24ஆம் திகதி**

கண்டி மாவட்டத்திற்கான போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்டியில் நடைபெறவுள்ளது. இதிலும் 10க்கும் மேற்பட்ட அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.









சுன்னாகம், சூராவத்தையில் அமைந்துள்ள ஓம் சீரடி சாய் பாபா ஆலயத்தில் சிவத் தொண்டர் சங்கரப்பிள்ளை மகளான செல்லம்மா சிதம்பரப்பிள்ளை தம்பதிகளால், நேற்று மகேஸ்வர பூசை நடாத்தப்பட்டு தேவையுடைய குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 66



தீயவைகள் எப்போது பெருகும்? தீயவைகளை சகித்துக் கொள்வதாலும், அதனை தடுக்காமல இருப்பதாலும் கண்டும் காணாமல் இருப்பதாலும் தீயவைகள் பெருகும். இவைகளால்தான் துஷ்டத்தனம் தூண்டப்படுகிறது. சுயநலம், குறுகிய மனப்பான்மை கோழைத்தனம் ஆகியவை அநீதியை உருவாக்குகின்றன. சாதாரண விஷயமாகத் தோன்றும் இவை தான் அநீதியின் தாயாகும். கொலை, கொள்ளை, பலாத்காரம் ஆகியவை சட்டத்தின் பார்வையில் தண்டனைக்குரிய குற்றங்களாகும். அதே போல் சுயநலம் குறுகிய மனப்பான்மை. சமுதாய பொறுப்புகளைத் தட்டிக் கழித்தல் போன்றவை தெய்வத்தின், ஆன்மீகத்தின் சட்டப்படி பெரும் பயங்கர பாவமாகும்.

மக்களின் இவ்வித மனப் போக்கின் காரணமாகத் தான் தனி மனிதனும், சமுதாயமும் வீழ்ச்சியடைக்கின்றன. இதன் தீய விளைவுகளை நாம் அனைவரும் அனுபவிக்க நேரிடுகிறது. கடந்த காலங்களில் இவை தான் நடந்து வந்துள்ளன. அவரவர்கள் தத்தமது குடில்களில் அமர்ந்து கொண்டு காலம் கழித்து வந்தனர். துஷ்டர்களை எதிர்த்து சிறிதும் பெரிதுமான கட்டுப்பாடுகளை விதித்து தடை செய்யாமையால் இந்நிலை வந்துள்ளது. கடினமான இத்தருணத்தில் நமக்கு பெரும் பொறுப்பு உள்ளது என்பதை அறிந்து செயல் புரிவோம்.

எலும்பும் தோலும் கொண்ட பொம்மை போன்று பலவீன உடலுடன் வாழ்வது இழிவான வாழ்க்கையாகும். சாதாரண உயிரினங்கள், விலங்குகள், பறவைகள் போல தோல் போர்த்திய பிணங்களைப் போல வாழ்வது இழிவான வாழ்க்கையாகும். இவ்வாறு வாழ்வதால் வாழ்வின் நோக்கம் நிறைவேறாது.

சிந்திக்கும் ஆற்றல் தான் மற்ற உயிரினங்களிலிருந்து மனிதனை சிறப்பித்துக் காட்டுகிறது. அதனால் தான் அவன் வசதி வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கிறான். இதுவே சிந்தனையின் முதல் வெளிப்பாடு எப்போது எண்ணங்கள் சக்தி வாய்த்தாக வாழ்க்கையின் குறிக்கோளாக அதன் வடிவமாக அவைகளை பயன்படுத்தும் புரிதலாக உருவாகிறதோ அது சிந்தனையின் அடுத்த வெளிப்பாடு ஆகும். இந்த வழியையும், முயற்சியையும் தான் நாம் தத்துவ ஞானம், தத்துவம், ஆன்மீகம் என விளிக்கிறோம்.

கடவுளால் வழங்கப்பட்ட இந்த எண்ண வலிமையை பெரும் லட்சியத்தை அடைவதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்பவனின் வாழ்க்கை முறை முற்றிலும் மாறி, அவனுடைய ஒவ்வொரு செயலிலும் உற்சாகம் மிகுந்திருப்பதால் அவன் ஒரு முன்னுதாரணப் புருஷனாக, நிறைந்த வாழ்க்கையை வாழ்கிறான்.





வவுனியா, வேப்பங்குளம், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை....

# அறநெறி அறிவுநொடி



முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

*19462 - கோயிலில்முதலில் யாரை தரிசித்து வலம் வரவேண்டும்?*

**பிரதான மூலவரை**

*பிரதான மூலவரை அடுத்து யாரை தரிசித்து வலம் வரவேண்டும்?*

**அம்பாள் மற்றும் பரிவாரங்களை தரிசித்து வலம் வரவேண்டும்.**

**மூன்றாவது யாரை தரிசித்து வலம் வரவேண்டும்? நவக்ரஹம், சண்டிகேஸ்வரர், பைரவர் ஆகியோரை தரிசித்து வலம் வரவேண்டும்.**

*19463 - பஞ்சாங்கத்தில்நட்சத்திரம், திதி போன்றவை மதியம் ஆரம்பித்து மறுநாள் மதியம் வரைஇருப்பதாக பார்க்கிறோம். விரதம், வழிபாட்டை எப்போது செய்ய வேண்டும்?*

**விரதம், வழிபாடு மேற்கொள்வதற்கு இரவில் திதி வியாபித்து இருக்கவேண்டும் என்பது நியதி. அதனால், முதல்நாளிலேயே விரதத்தை மேற்கொள்ளுங்கள். திதி கொடுப்பது, தர்ப்பணம் செய்வது போன்றவற்றிற்கு இது பொருந்தாது.**

*19464 -சுவாமிக்கு சாத்தியமாலையை வாகனத்தின் முன்கட்டிக் கொள்ளலாமா?*

**சுவாமிக்கு சாத்திய மாலைகள் பிரசாதம் எனும் புனிதப் பெயரையடைகின்றன. இவை காலில் படும்படியாக எங்கும் விழக்கூடாது. வாகனங்களில் கட்டிக் கொள்வதால் அது செல்லும் இடம் எல்லாம் சிதறி விழும். அதன் மீது மற்றைய வாகனங்கள் ஏறிச்செல்வது, நம் காலில் படுவது போன்ற தவறுகள் ஏற்படுகின்றன. இது பாவச் செயல். செய்யக்கூடாது.**

*19465 -திருஷ்டி கழிக்க ஏற்ற முறைஎது என்று சொல்லுங்கள்?*

**சாம்பிராணி புகை போட்டும், தேங்காயில் சூடம் கொளுத்தி வைத்தும், மிளகாய் வத்தல், காலடி மண்ணைச் சுற்றி நெருப்பில் போட்டும் இப்படி ஏதாவது ஒன்றைச் செய்து திருஷ்டி கழிக்கலாம்.**

*19466 -திருஷ்டி கழிக்க ஏற்ற நாட்கள் என்னென்ன?*

**ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஏற்ற நாட்கள்.**

*19467 - செவ்வாய், வெள்ளிக்கிழமையில் வீட்டில் ஒட்டடை அடிக்கக் கூடாதா ஏன்?*

**செவ்வாயும், வெள்ளியும் பொருள் வாங்கிச் சேர்த்தால் வளரும். அதனால், இவ்விரு நாட்களிலும் வீட்டைத் துடைப்பதில்லை. முதல்நாளே ஒட்டடை அடித்து சுத்தப்படுத்தி விடுங்கள்.**

*19468 -பிறந்த குழந்தையை கோயில் தரிசனத்திற்கு எவ்வளவு நாள் கழித்து அழைத்துச் செல்ல வேண்டும்?*

**குழந்தை பிறந்து 22 நாள் வரை தாய்க்கும் சேய்க்கும் தீட்டு உண்டு. எனவே அதன் பிறகு ஒரு நல்ல நாள் பார்த்து தரிசனத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.**

## சர்வதேச நாணய நிதியத்துடன்...

அத்துடன் ஜனாதிபதியின் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையினால் இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை சரியான பாதையில் கொண்டு செல்ல முடிந்துள்ளதாகவும், இன்று இலங்கை தனது ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துக் கொண்டு, அனைத்து நாடுகளுடனும் நட்புறவைக் கட்டியெழுப்புகின்றது எனவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

ஒரு தரப்பிடம் சரணடையாமல் அனைத்து நாடுகளுக்கும் நட்புறவின் கரங்களை நீட்டியதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை இலங்கை பெற முடிந்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (08) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி,

"வெளிநாட்டலுவல்கள் அமைச்சு என்ற வகையில், கடந்த ஆண்டு முதல் நாம் முக்கியப் பங்காற்ற வேண்டியிருந்தது. கடந்த காலங்களில் எற்பட்ட பல்வேறு விடயங்களால் வெளிநாடுகளுடனான நமது உறவுகள் பாதிக்கப்பட்டன. ஆனால், ஜனாதிபதியின் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையினால் இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை சரியான பாதையில் கொண்டு செல்ல முடிந்துள்ளது. அதேபோன்று, எமது நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துக்கொண்டு அனைத்து நாடுகளுடனும் நட்புறவை ஏற்படுத்தி வருகிறோம்.

ஒரு தரப்பைச் சார்ந்திருக்காமல் அனைத்து தரப்பினருடனும் இணக்கமாக செயல்படுவதே எமது நோக்கம். அனைத்து நாடுகளுடனும் நட்புறவைக் கட்டியெழுப்புவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும். யாரையும் பகைத்துக் கொள்ளாமல் எந்த தரப்புக்கும் சாதகமாக இல்லாமல் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

இந்த நட்புறவின் மூலம் பல வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் கடன் மறுசீரமைப்புக்கு பாரிஸ் சமூகத்தில் சில வழிமுறைகள் உள்ளன.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு மேல் உள்ள நாடு என்ற வகையில், கடனை மறுசீரமைப்பதற்கான பொறிமுறை நம்மிடம் இல்லை. எனவே நாங்கள் எமக்கே உரிய பொறிமுறையை தயார் செய்ய வேண்டியிருந்தது. இதன்போது, பாரிஸ் கிளப்புக்கு வெளியே இந்தியா, சீனா மற்றும் ஜப்பானின் ஆதரவின் மூலம் பாரிஸ் கிளப்பிலிருந்து சில உதவிகளைப் பெற முடிந்தது. கடந்த மாத நிலவரப்படி, நமது நாட்டின் கடனை மறுசீரமைக்க அனைத்து நாடுகளும் ஆதரவளிக்க ஒப்புக்கொண்டுள்ளன. இதன் காரணமாக, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நாட்டில் கடன் மறுசீரமைப்பை விரைவுபடுத்தும் திறன் எம்மிடம் உள்ளது. ஜனாதிபதியின் சரியான தீர்மானங்கள் காரணமாக இந்தியா, சீனா, மேற்கத்திய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் உட்பட அனைத்து நாடுகளிலும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடன் வழங்குநர்களின் ஒப்புதலைப் பெற முடிந்துள்ளது. கடன் மறுசீரமைப்புக்குப் பிறகு, நம் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிடும் என்பதை உலகுக்கு அறிவிக்க முடியும். எமது மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். ஆனால் இன்று நாட்டை அந்த நிலையிலிருந்து மீட்டெடுக்க அரசாங்கம் படிப்படியாக செயல்பட்டு வருகிறது. கடன் மறுசீரமைப்பு மூலம் நாம் செலுத்த வேண்டிய கடனின் அளவைக் குறைக்க முடிகிறது. மேலும், கடனைச் செலுத்தும் அளவைக் குறைத்து, வட்டியைக் குறைப்பதன் மூலம், நாம் செலுத்த வேண்டிய கடனில் இருந்து பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிவாரணத்தை எமது நாடு பெறும் திறன் உள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு புதிய முதலீட்டாளர்கள் தேவை. அதற்கான வேலைத்திட்டத்தை நாம் இப்போது தொடங்கியுள்ளோம். அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில், தற்போதுள்ள பொருளாதார நிலையில் இருந்து நாட்டை மேலும் மேம்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி மேலும் தெரிவித்தார்.

## 251 படையினரையும் மீளப்பெறும்...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் சபையில் தெரிவித்த அவர்,தனது உயிருக்கு இராணுவத்தினராலும் பாதுகாப்பு தரப்பினராலும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மிஹிந்தலை விகாராதிபதி கருதும் பட்சத்திலேயே இராணுவத்தினர் உட்பட 251 பாதுகாப்பு அதிகாரிகளையும் மீளப் பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் இராணுவத்தினர் மீது படுகொலைக் குற்றச்சாட்டை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதைச் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், மிஹிந்தலை புனித பூமி பிரதேசத்துக்கு கடமைக்காக செல்வதற்கு இராணுவத்தினர் விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார். பாராளுமன்றத்தில் நேற்று அது தொடர்பில் மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

மிஹிந்தலை விகாரைக்கும் அதன் விகாராதிபதிக்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியது எனது பொறுப்பாகும். மிஹிந்தலை புனித பூமியில் 103 கடற்படையின் அதிகாரிகளும் 48 இராணுவத்தினரும் 100 சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன் ஏனைய அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

விகாராதிபதியின் கோரிக்கைக்கமைய பல்வேறு செயற்பாடுகளுக்காக பாதுகாப்பு படைவீரர்களை மிஹிந்தலைக்கு வழங்கியுள்ளோம்.

கடந்த பொசன் உற்சவத்தின் போது 150 மண் மூடைகளை இராணுவத்தினர் தமது தோளில் சுமந்தவாறு விகாரைக்கு கொண்டு சென்று புனரமைப்பு பணிகளை முன்னெடுத்துள்ளார்கள்.

கடந்த அக்டோபர் மாதம் 07 ஆம் திகதிக்குப் பின்னர் மத வழிபாட்டு தலங்கள், சுற்றுலாத்துறை மையங்கள் உட்பட பொது இடங்களின் பாதுகாப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சிவில் உடையுடன் இராணுவத்தினர் விகாரைக்கு செல்ல முடியாது என்பதை நேற்று முன்தினமே எம்மால் அறிந்து கொள்ள முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது சபையில் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து கருத்துக்களை வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இராஜாங்க அமைச்சரின் தவறான தீர்மானம் தொடர்பில் கடும் அதிருப்தியை தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரியாமல் இனந்தெரியாத இருவரையே குறித்த புனிதப் பிரதேசத்திலிருந்து பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.இவ்வாறான நிலையில் அங்கு பாதுகாப்பில் உள்ள 251 பேரையும் மீளப் பெறுவதாக குறிப்பிடுவது அநீதியாகும்.பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் அரசியலமைப்பின் ஊடாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. ஆகவே தவறான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்,இந்த இரண்டு அதிகாரிகளும் 48 இராணுவத்தினருடன் இரண்டு வாரங்களாக மிஹிந்தலை புனித பிரதேசத்தில் தங்கியிருந்துள்ளார்கள்.

எனினும், பாதுகாப்பு தரப்பினர்களுக்கு தெரியாத நபர்கள் என்று அவர்களைக் குறிப்பிடுவது தவறு.இராணுவத்தினருக்கும் சுய கௌரவம் உள்ளது. அவர்களின் சுய கௌரவம் தொடர்பில் நாம் விசேட கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்நாட்டின் கிரிக்கெட்டை அரசியல்...

தான் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் (1.5 பில்லியன்) 150 கோடி ரூபாவை பாடசாலை கிரிக்கெட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கியதாகவும், எதிர்காலத்தில் அதனை வருடாந்தம் (02 பில்லியன்) 200 கோடி ரூபா வரை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நிதி நிர்வாகத்தையும், பாடசாலை கிரிக்கெட்டின் அபிவிருத்தியையும் சுயாதீன நிதியம் ஒன்றிடம் ஒப்படைக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, சகல செயற்பாடுகளையும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுத்து எதிர்பார்த்த இலக்குகளை அடைவதே அதன் எதிர்பார்ப்பாகும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், கிரிக்கெட் விளையாட்டு தொடர்பில் எதிர்காலத்தில் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டத்தின் மூலம் இடைக்கால குழுக்கள் மற்றும் அமைச்சரின் அதிகாரங்கள் நீக்கப்படும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விளையாட்டானது வணிகமயமாக்கப்படும் என்றால் அது அரசியலிலிருந்து விடுபட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நாட்டில் புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதன் மூலம் சுபீட்சமான நாடாக மாறுவதற்கான திட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும், கிரிக்கெட் போன்ற ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்கும் நாடாக இலங்கை மீண்டும் மாற வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் (08) நடைபெற்ற கொழும்பு கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

1996 உலகக் கிண்ணத்தை வென்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் 2014 பந்துவீச்சு 20 (T20) உலகக் கிண்ணத்தை வென்ற அணிக்கும் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்துவம் இதன் போது வழங்கப்பட்டது. மேலும் பல வருடங்களாக கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு பங்களிப்புச் செய்த உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிசுகளையும் வழங்கினார்.

## நாடு முழுதும் திடீர் மின் துண்டிப்பு...

சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பில் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதை தாம் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் சபையில் குறிப்பிட்டார். இந்த மின் விநியோக கட்டமைப்பில் ஏற்பட்ட செயலிழப்பு தொடர்பாக தொழில்நுட்ப ரீதியில் ஆராய வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.பாராளுமன்றத்தில் நேற்று அது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஊடகவியலாளர்களுக்கான...

வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் பத்திரிகை துறையில் நீண்ட காலமாக சேவையாற்றி வரும் ஊடகவியலாளர்கள் ஐந்து பேருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்படவுள்ளன. ஸ்டான்லி சமரசிங்க எப். எல். டி மஹிந்தபால, சீதா ரஞ்சனி, கரவெட்டி எஸ். தில்லை நாதன் மற்றும் எம்.ஏ. எம். நிலாம் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

## வடக்கு ரயில் பாதை புனரமைப்பு...

வரை எதிர்வரும் ஜனவரி 07ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதனால் தற்காலிகமாக 06 மாதங்களுக்கு மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான ரயில் சேவை நிறுத்தப்படவுள்ளதாகவும், ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

எதிர்வரும் ஜனவரி 07ஆம் திகதி முதல் கொழும்பு, கோட்டையிலிருந்து வடக்கு நோக்கி புறப்படும் ரயில்கள் மஹவ சந்தி வரை மட்டுமே செல்லும். இதேவேளை, காங்கேசன் துறையிலிருந்து புறப்படும் ரயில் அநுராதபுரம் வரை மட்டுமே சேவையில் ஈடுபடுமெனவும், ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள ரயில்வே திணைக்களத்தின் 1971 என்ற அவசர இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும், ரயில்வே திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

## ஏயார் அரேபியா முதலாவது...

அபுதாபியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமானங்கள் ஒவ்வொரு புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இரவு 08.00 மணிக்கு வந்து சேரும், அதே விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இரவு 08.30 மணிக்கு அபுதாபிக்கு புறப்படும்.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் உதய இந்திரரத்ன, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் உப தலைவர் பொறியியலாளர் அதுல கல்கட்டிய, விமானப் போக்குவரத்து சேவைகளின் தலைவர் திரு. நிஷான் அபேவர்தன மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த முதல் விமானத்தை வரவேற்க, ஏராளமான மக்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்.

## நாடு திரும்புவதற்கு முன்னர் இந்திய...

நட்புறவு நிரந்தரமானதென்றும் கூறினார். அவருக்கு பின்னர் நியமிக்கப்படும் புதிய இந்திய உயர்ஸ்தானிகருக்கும் தனக்கு வழங்கிய ஆதரவு போன்றே பிரதமர் ஆதரவளிப்பாரென தான் எதிர்பார்ப்பதாகவும் கோபால் பாக்லே கூறினார். மிகவும் கடினமான நேரத்தில் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே அளித்த உதவி மற்றும் ஆதரவைப் பாராட்டிய பிரதமர், இரு நாடுகளுக்குமிடையே கிடைத்த உதவி மற்றும் ஆதரவையும் பாராட்டினார்.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் திருமதி கோபால் பாக்லே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## எரிபொருள் விலை, மின் கட்டணத்தை...

சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார். உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்து வருவதாலும் நாட்டில் நிலவும் அதிகளவு மழை வீழ்ச்சியுடனான காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளமையை கவனத்திற் கொண்டும் இவ்வாறு எரிபொருள் விலையை குறைப்பதற்கும் மின் கட்டணக் குறைப்பை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க முடியுமென்றும் அவர் சபையில் நம்பிக்கை வெளியிட்டார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வற் வரி திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## வடக்கு, கிழக்கு, வடமத்திய...

வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் தெரிவித்துள்ளார். வானிலை குறித்து அவர் மேலும் கூறுகையில், நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. மத்திய, சப்ரகமுவ, மேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும். பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பொத்துவில் தொடக்கம் மட்டக்களப்பு, திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் குறிப்பாக மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். கடல் பிராந்தியங்களில் மணிக்கு 25 – 35 கிலோமீற்றர் வேகத்தில் வடகிழக்குத் திசையிலிருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும். நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். ஆனால் இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் எனத் தெரிவித்தார்.

## கொழும்பு துறைமுகத்தில்...

சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுகத்திலுள்ள பயணிகள் கப்பல் முனையத்தை நேற்று நேரில் சென்று ஆய்வு செய்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். தற்போது ஐரோப்பா உள்ளிட்ட உலகின் பல பகுதிகளில் குளிர்காலம் தொடங்கியுள்ளதால், பயணிகள் கப்பல்களும் அதிக அளவில் கொழும்பு துறைமுகத்தை வந்தடைகின்றன. நேற்று (10) துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பயணிகள் முனையத்தில் வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக துறைமுக வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளை அவதானிப்பதற்காக விசேட கள விஜயமொன்றை மேற்கொண்டார். அங்குள்ள வசதிகளை விரிவுபடுத்தவும், குறைபாடுகளை முறைப்படுத்தவும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான தற்போதைய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு கொழும்பு துறைமுகத்தின் பங்களிப்பின் தனித்துவமான முக்கியத்துவத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார். நேற்று மட்டும் (10) வாஸ் கோடகாமா. (Vasco da Gama), மெயின் ஷிஃப் 05 (Main Ship5), மற்றும் எம்எஸ் செவன் சீஸ் (MS Seven Seas ) ஆகிய 03 சொகுசு பயணிகள் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன. சுமார் 4,000 சுற்றுலாப் பயணிகள் இந்தக் 03 கப்பல்களில் வருகை தந்துள்ளதாக உள்ளூர் நிறுவனமான Aitken Spence நிறுவனம் தெரிவித்துள்ளது.

## கோரம் இன்மையால் நேற்று...

உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதற்கமைய, கோரம் மணி 05 நிமிடங்கள் ஒலிக்கப்பட்டது. எனினும் விவதம் நடத்துவதற்குரிய கோரம் இன்மையால் நிலையியற் கட்டளைகளுக்கமைய பாராளுமன்ற இன்று (11) மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ அறிவித்தார். அரசியலமைப்பின் 73 ஆம் உறுப்புரையின்படி பாராளுமன்றத்தின் சபையை கொண்டு நடத்துவதற்கு தலைமைதாங்கும் உறுப்பினர் உட்பட இருபது உறுப்பினர்கள் இருகக வேண்டும். அத்துடன், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 11 இன் பிரகாரம் எந்நேரத்திலாவது கோரமின்மை என்பது சபாநாயகரினதோ அல்லது தலைமைதாங்கும் உறுப்பினரதோ கவனத்துக்கு கொண்டுவரப்பட்டால் அவர் கோரம் மணி அடிக்கக் கட்டளையிடுவார்.

கோரம் மணி ஒலிப்பின் ஐந்து நிமிடங்களின் முடிவில் கோரம் காணப்படாதபோது சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர் வினாவின்றி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல் வேண்டும்.

## இன்றைய பலன்கள்

**(11. 12. 2023 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.



**ரிஷபம்:** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.



**மிதுனம்:** மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.



**கடகம்:** தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.



**சிம்மம்:** எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.



**கன்னி:** தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.



**துலாம்:** நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.



**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.



**தனுசு:** ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.



**மகரம்:** உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.



**கும்பம்:** லாபமும் விரயமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.



**மீனம்:** அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.

## திடீர் வாழ்க்கைச் செலவு.. (3ஆம் பக்க தொடர்ச்சி)

மூர்க்கத்தனமான தீர்மானத்தால் ஒட்டுமொத்த விவசாயத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட விளைவுகளை குறுகிய காலத்துக்குள் சீர்படுத்த முடியாது. உர பற்றாக்குறையால் பெருந்தோட்டத் தொழிற்றுறை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார பாதிப்பினால் பெருந்தோட்ட மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்போதைய வாழ்க்கை செலவுகளுக்கு மத்தியில் 1,000 ரூபா சம்பளம் சாத்தியமற்றது.

ஆகவே தோட்ட தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளமாக 2,000 ரூபா வழங்க வேண்டும் என்றார்.

## அரசியலுக்கு அப்பாற்பட்டு... (3ஆம் பக்க தொடர்ச்சி)

குமாறு நாணய நிதியம் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை என்றும் தெரிவித்தார்.

அந்த வகையில் புதிய வரிக்கொள்கையினால் சமூக கட்டமைப்பு மிக மோசமாக பாதிப்படையும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற வற் வரி (திருத்தச்) சட்ட மூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## நிர்மாணத்துறை ஒப்பந்ததாரருக்கு...

செயலாளர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. இதன்படி, இது தொடர்பான கொடுப்பனவு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு அதற்கேற்ப நிலுவைத் தொகைகளை செலுத்துவதை நிறைவு செய்யும்.இதேவேளை, நிர்மாணத்துறைக்காக தனியான அபிவிருத்தி வங்கியொன்றை நிறுவுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

திறைசேரிக்கு இந்த யோசனை சம்பந்தமாக எண்ணக்கருப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், கிடைக்கும் பதில்களின் அடிப்படையில் புதிய வங்கி ஸ்தாபிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## மோடியை சந்திக்கும் விடயத்தில்...

நிறைவேறாதுள்ளதென தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார். இவ்விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எம்முடனான சந்திப்புக்களின் போது வழங்கிய உறுதி மொழிகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படாது காலம் கடத்தப்பட்டு வந்த நிலையில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் கிடப்பில் போடப்பட்ட நிலைமையே நீடித்துக்கொண்டிருக்கின்றது. இவ் விடயங்களை மையப்படுத்தி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து உரையாடுவதற்கான முன்மொழிவொன்றை நான் இலங்கை தமிழரசுக்கட்சி மற்றும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளுடனும் கலந்துரையாடிய தருணத்தில் முன்வைத்தேன். அதன்போது அக்கட்சிகளின் தலைவர்கள் இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதனடிப்படி, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை நேரில் சந்திப்பதற்கு விரும்புவதற்கான காரணங்களை குறிப்பிட்டு அவரிடத்தில் நேர ஒதுக்கீட்டை வழங்குமாறு கோரிக்கை விடுக்கும் கடிதம் தயார்படுத்தப்பட்டுள்ளமையை தெரியப்படுத்தினேன். அச்சமயத்தில், இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா தமது கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தனுடன் உரையாடிவிட்டு கையொப்பமிடுவதாக கூறினார்.

## பெருந்தோட்டத்துறை வாழ் மக்களின்...

அந்த மக்களின் சிறந்த வாழ்க்கைத் தர மாற்றத்துக்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகளும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம்(08) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் விவசாயத் துறை மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# கட்டாரில் இலவச மருத்துவ முகாம்










கட்டார் மனிதநேய கலாச்சார பேரவை நசீம் மெடிக்கல் சென்டரோடு இணைந்து மாபெரும் இலவச மருத்துவ முகாமொன்றை (09.12.2023) நசீம் மெடிக்கல் வளாகத்தில் கட்டார் மனிதநேய கலாச்சார பேரவை செயலாளர் முஹம்மது யாசின் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது. உத்தமபாளையம் முஹம்மது உவைஸ், கீழக்கரை முஹம்மது ஹுசைன், வரதராஜன், திருமதி இந்திரா வரதராஜன், திருமதி ரெஜினா சாதிக், தஸ்தகீர் சுலைமான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். முகாமில் முழு உடல் பரிசோதனை செய்து அதற்கான மருந்துகளையும் இலவசமாக வழங்கினர். அத்துடன் கண், பல், காது, எலும்பு என அனைத்து வகையான உடல் பிரச்சினைகளுக்கும் ஆலோசனை வழங்கினர். சிறப்பு அழைப்பாளராக தாயகத்தில் இருந்து வருகை தந்த உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்ற மாநில செயலாளர் பி.கே பாபு மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்.



# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடல்

சமூகமேம்பாட்டுக்குழுவின் ஒழுங்கமைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலாநிதி க. இரகுபரன் தலைமையில் நாளை மறுதினம் 13ம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் 'நம் சிறுவர்களின் சமகால நிலை' என்னும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் த. அரியரத்தினம் உரை நிகழ்த்தவுள்ளார்.

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்**

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**ஒப்பந்தத்தின் பெயர்**

**குருகுலமடம், விஷ்ணு கோவில் வீதி, 1ஆவது மற்றும் 2ஆவது குறுக்கு வீதி நடைபாதை கொங்கிறீட் அமைத்தல்**

தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறையின் கீழ் மேலுள்ள பணிகளுக்காக விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 2023.12.11 ஆம் திகதி தொடக்கம் 2023.12.14 ஆம் திகதி வரை www.rda.gov.lk என்ற வீ.அ.அ. மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இணையதள பக்கத்தை பார்ப்பதற்கு கோரப்படுகின்றனர்.

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம்**

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**பதவிவெற்றிடங்கள் – கருத்திட்ட அலுவலர்கள்**

01/2019 ஆம் இலக்க, முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் புகையிரத வினைத்திறன் மேம்பாட்டுக்கருத்திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு கருத்திட்டப அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கோருகிறது.

புகையிரத வினைத்திறன் மேம்பாட்டுக் கருத்திட்டமானதுஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் இலங்கை புகையிரதம் என்பன கூட்டிணைந்து செயற்படுத்துகின்றது.

இலங்கை பிரசைகளான, ஆங்கில மொழியில் தேர்ச்சி, அரசாங்க ஒழுங்குமுறைகள் பற்றிய அறிவு, நன்கொடையாளர்களின் நிதியுதவி திட்டத்தின் கீழ் குடும்பங்களை வேறிடப்படுத்துவதில் பெற்றுள்ள அனுபவம் மற்றும் கணினி அறிவாற்றல் ஆகியவற்றில் அத்தியாவசிய முன்நிபந்தனைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து மேற்கூறிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | பதவி வெற்றிடங்களின் எண். |
|---|---|---|
| 01 | சமூகப் பாதுகாப்பு அலுவலர் | 01 |
| 02 | கருத்திட்ட செயலாளர் | 01 |

சமூகப் பாதுகாப்பு அலுவலர் (PS 06) – பதவிகளின் எண் : 01

சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல், கணக்கெடுப்பு ஆய்வு நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட மதியுரையாளர்களினால் நடாத்தப்படுகின்ற சமூக மற்றும் சுற்றுச்சூழல் கணக்கெடுப்புகளில் செயலூக்கத்துடன் பங்கேற்றல், மீள்அமைவிடப்படுத்தலினை செயல்படுத்துதல், காணி கையகப்படுத்துதல், வேறிடப்படுத்தல் போன்றவை உள்ளடங்கலாக கருத்திட்டத்தின் அனைத்துச் செயல்பாடுகள் தொடர்பான சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கண்டறிந்து, பிரதி கருத்திட்டப் பணிப்பாளரினால் மற்றும் மேலதிக கருத்திட்டப் பணிப்பாளரினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களுக்கு அமைய, அவற்றைத் தீர்த்தல் என்பன சமூகபாதுகாப்பு அதிகாரியின் பொறுப்பாகும்.

**தேவையான தகைமைகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, சம்பந்தப்பட்ட துறையில் பெறப்பட்டுள்ள இளங்கலைப் பட்டம்.

   அல்லது

   சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகைமை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது என்பதற்கான தகைமைசான்று

   அல்லது

   இணை உறுப்புரிமை நிறுவனத்தில் அங்கத்துவம் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாய்மை நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட குறித்த பதவிக்கு நிகரான தொழில்வாய்மைத் தகைமை

   மற்றும்

   குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தேவையான துறையில் குறைந்தபட்சம் 4 வருட அனுபவம் (குறிப்பாக நன்கொடையாளர் நிதியளிப்புக் கருதிட்டம் தொடர்பான அனுபவம்).

**கருத்திட்ட செயலாளர் (PS 06) – பதவிகளின் எண் : 01**

1. க.பொ.த.( சாதாரண) தரப் பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் சிங்களம் / தமிழ் மொழி உள்ளடங்கலாக மூன்று (3) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

   அத்துடன்

   அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட செயலகம் சார்ந்த கற்கைநெறி அல்லது பட்டயச் செயலாளருக்கு இட்டுச்செல்கின்ற பரீட்சை தொடர்பிலான பாடநெறியைப் பின்தொடர்தலுக்கான சான்றிதழ்

   அத்துடன்

   சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் 6 வருட அனுபவம்

2. சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவத்துடனான பட்டய செயலாளராக இருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:**

பிஎஸ் 6 மட்டம் – ரூபா. 67,000.00 முதல் ரூபா. 73,000.00 வரை (மாதச் சம்பளம்)

பொதுவான நிபந்தனைகள்:

1. வயது எல்லை: 64 வயதுக்குக் குறைவானவர்களாக இருத்தல் (64 வயதுக்கு மேற்பட்டோர் கருத்திற்கொள்ளப்படமாட்டார்கள்.)
2. தொழிலாளரின் ஊழியர் சேம நிதியத்திற்கான பங்களிப்பு 8% ஆகவும், தொழில் வழங்குநரின் ஊழியர் சேமநிதியத்திற்கான பங்களிப்பு 12% ஆகவும், இருத்தல் வேண்டுமென்பதுடன்,ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் தொழிலாளர் மாதாந்த சம்பளத்தில் 3% இனைச் செலுத்துதல் வேண்டும்.
3. தொழில் நியதி: கருத்திட்டக் காலம் மற்றும் திருப்திகரமான செயலாற்றுகை ஆகியவற்றைப் பொறுத்து நீட்டிப்புக்கான வசதியுடன் ஆரம்பத்தில் ஒருவருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படும்.

**விண்ணப்பப் படிவங்கள்:**

விண்ணப்பதாரர்கள் கல்வி, தொழிற்தகைமைகள், கருத்திட்டம் மற்றும் புகையிரதத் துறையோடு சம்பந்தப்பட்ட அனுபவங்கள் என்பனவற்றினைக் குறிப்பிட்டு உறவினர்கள் அல்லாத இரு மத்தியஸ்தர்களின் விபரத்துடன் தயாரிக்கப்பட்ட தமது சுய விபரக் கோவையினை 2023.12.27ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தாம் விண்ணப்பிக்கின்ற பதவியினை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, கருத்திட்டப் பணிப்பாளர், புகையிரத வினைத்திறன் மேம்பாட்டுக் கருத்திட்டம், இல. 217, கோட்ட வீதி, கொழும்பு 08 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அரசு / பகுதியளவிலான அரசுத் துறை நிறுவனமொன்றில் கடமையாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவங்களைத் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பத்தை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் முன்கூட்டிய பிரதியொன்றினை அனுப்புமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**செயலாளர்,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7 ஆம் மாடி, "செத்சிறிபாய" , கட்டம் II,**
**பத்தரமுல்லை.**
**2023.12.05**

# மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு





இலங்கை மெதடிஸ்ட் சர்ச் காது கேளாதோர் Deaf Link நிறுவனத்தின் பூரண அனுசரணையில் அநுராதபுரம் மத்திய நுவரகம் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு கடந்த (07) நடைபெற்றது. இதன் போது மாற்றுத்திறனாளிகளின் நடனம், நாடகம் உள்ளிட்ட பல நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர மத்திய நுவரகம் பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜீ.சேனாரத்ன ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசில்கள் வழங்கிவைப்பதையும் கலந்து கொண்டோர்களில் ஒரு பகுதியினரையும் நிறுவனத்தின் இணைப்பாளர்ளான ஜெயவூலா ஜெயகுணரூபன் மற்றும் சாமர பிரசன்ன சில்வா உள்ளிட்டோரையும் படத்தில் காணலாம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# ஊடக அறிவித்தல்

## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை 2022 (2023)

**பெறுபேறு மீளாய்வு செய்தலுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) ஊடாக பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

1. குறித்த பரீட்சையின் மீளாய்வு விண்ணப்பங்கள் நிகழ்நிலையில் மாத்திரம் கோரப்படும்.
2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2023.12.04 ஆந் திகதியிலிருந்து 2022.12.18 ஆம் திகதி வரை இடம்பெறும்.
3. மீளாய்விற்காக விண்ணப்பிக்கும்போது பின்வரும் முறைகளைப் பின்பற்றவும்.
   - பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான (https://www.doenets.lk) இல் பிரவேசித்து "எமது சேவை" என்பதில் கீழுள்ள நிகழ்நிலை விண்ணப்பப் படிவம் "பாடசாலைப் பரீட்சைகள்" மீது Click செய்தல் மூலம் அதன் பின்னர் "Application for Re- Scrutiny of Results" இல் உட்பிரவேசிப்பதன் மூலம்
   - பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ கையடக்க (Mobile Application) பிரயோகமான DOE இல் பிரவேசித்து நிகழ்நிலை விண்ணப்பப் படிவம் (பாடசாலைப் பரீட்சைகள்) மீது Click செய்தல் மூலம்
   - https://onlineexams.gov.lk/eic இல் பிரவேசித்தல் மூலம்
4. முறைமையினுள் பிரவேசிக்கும்போது தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் க.பொ.த(சா/த)- 2022(2023) பரீட்சைக்குத் தோற்றிய சுட்டெண்ணைப் பயன்படுத்த வேண்டும்.
5. படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்பு தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் (Technical Instructions), பொது அறிவுறுத்தல்கள் (Common Instructions) என்பவற்றை வாசித்தல் மற்றும் வீடியோவைப் பார்த்தல் மூலம் சரியான முறையில் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தல் அவசியமாகும்.
6. ஒரு பாடத்திற்குரிய மீளாய்விற்கான பணம் 200/- ரூபா ஆகும். Credit Card / Debit Card மூலம் அல்லது தபாற் கந்தோரில் பணத்தைச் செலுத்த வேண்டும்.
7. பணத்தைச் செலுத்திய பின்பு விண்ணப்பப் படிவத்தினை PDF முறையில் பதிவிறக்கம் (Download) செய்ய முடிவதோடு, அவ் விண்ணப்பப் படிவத்தை தாங்கள் வைத்திருக்க வேண்டும். பணம் செலுத்திய பின்பு தங்களது கைத்தொலைபேசிக்கு SMS மூலம் தகவல் கிடைக்கப் பெறும்.
8. மீளாய்வு செய்வதற்கான சகல பாடங்களையும் சரியாக பூரணப்படுத்துவது விண்ணப்பதாரியின் கடமையாவதோடு குறித்த பணம் செலுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எந்தவொரு காரணத்திற்காகவும் விண்ணப்பத்திற்காக செலுத்தப்பட்ட கட்டணம் மீள அளிக்கப்பட மாட்டாது.
9. மேற்படி விடயம் தொடர்பில் விசாரணைகள் ஏதும் இருப்பின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் ஊடாக விசாரிக்க இயலும்.

| | |
|---|---|
| பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) கிளை | - 011-2785231/ 011-2785216 /011-2784037 |
| அவசர உதவிகளுக்கு | - 1911 |

**H.J.M.C. அமித் ஜயசுந்தர**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளி 2023.12.08
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5322 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,368,088.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 2 7 6 9 8 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3564 — சீட்டிழுப்பு திகதி 2023.12.08 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,938,335.60
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 05 11 31 66 — விசேட எழுத்து N — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 19984

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1670 — 2023.12.08 — 00093 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 417,131,000.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 20 — வெற்றி இலக்கங்கள் 31 61 73 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2023.12.08 — சீட்டிழுப்பு இலக்கம் 148
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 3 7 0 8 5 6 — L7 எழுத்து N
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 21,143,199.48

ராசி சுப பலன் — திகதி 2023.12.08 — சீட்டிழுப்பு இலக்கம் 631 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,421,949.68
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 14 26 33 43 — தனயோக இலக்கம் 35572 — நாளுக்கான விதி எண் 02

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1352 — 2023.12.08 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,478,900.00
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 03 35 76 77 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 16552

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2023.12.09
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5323 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,424,288.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 9 9 7 2 4 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3565 — சீட்டிழுப்பு திகதி 2023.12.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,095,684.00
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 30 33 37 74 — விசேட எழுத்து N — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 14730

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1671 — 2023.12.09 — 73701 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 417,230,388.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 24 — வெற்றி இலக்கங்கள் 17 26 32 34
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2023.12.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0149
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 4 3 4 4 5 4 — L7 எழுத்து X
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 21,143,199.48

ராசி சுப பலன் — திகதி 2023.12.09 — சீட்டிழுப்பு இலக்கம் 632 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,421,949.68
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 10 22 25 39 — தனயோக இலக்கம் 54495 — நாளுக்கான விதி எண் 29

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1353 — 2023.12.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,478,900.00
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 33 40 44 80 — விசேட எழுத்து P — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 29456

# கிழக்கின் குரல்



# இலங்கைக்கு ஐந்து மில்லியன் சுற்றுலா பயணிகளை வரவழைப்பதே ஜனாதிபதியின் திட்டமாகும்

## பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முஷாரப் எம்.பி





(பெரியநீலாவணை விசேட நிருபர்)

ஐந்து மில்லியன் சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பது ஜனாதிபதியின் திட்டமாகும் என பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையில் நாவிதன்வெளி பிரதேச செயலக கூட்டம் மண்டபத்தில் (8) இடம்பெற்றது

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து இங்கு உரையாற்றிய அவர், நமது நாட்டில் அரச சேவையாளர்கள் அதிக அளவில் உள்ளனர். இவர்களுக்கான செலவினங்கள் வருடாந்தம் பல மில்லியன் ரூபாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. IMF அறிக்கையின் பிரகாரம் அரச சேவையாளர்களின் எண்ணிக்கையை குறைக்க ஆலோசனை வழங்கப்படுகிறது. எனினும் ஒவ்வொரு ஆண்டும் இருந்த அரசியல் சூழல்கள், நெருக்கடிகளால் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. திடீரென அவர்களை இப்போது தூக்க முடியாது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க செய்ய வேண்டும், இதற்காக சுற்றுலா பயணிகளை அதிகளவில் நம் நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான வேலைத் திட்டத்தை ஜனாதிபதி முன்னெடுத்து வருகிறார்.

2013 ஆம் ஆண்டு 1.5 மில்லியன் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இது ஒரு பெரிய அடைவாகும். 2004ஆம் ஆண்டு 2.5 மில்லியன் சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு வரவைப்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடைய எண்ணமாகும். அண்மையில் இந்தியா ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது, அதில் இலங்கையில் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய தகுதி இலங்கைக்கு இருக்கிறது.

இலங்கையினுடைய சுற்றுலா தளங்கள், காலநிலை, இயற்கை போன்ற அம்சங்கள் இதற்கு வழி வகுக்கின்றன. ஐந்து மில்லியன் சுற்றுலா பயணிகளை இலங்கைக்குள் கொண்டு வருவது ஜனாதிபதியுடைய எண்ணத்தில் உள்ள விடயமாகும். அதிகமான சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்து செல்வதால் இலங்கையினுடைய பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க முடியும். இதற்கு நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் எல்லோரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

பிரதேச அபிவிருத்தி குழு கூட்டங்களை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நாம் ஒழுங்கமைக்கும் போது சில திணைக்களின் பொறுப்பு அதிகாரிகள் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை. அதனால் தீர்மானங்களையும் பொதுமக்களுக்கான சேவைகளையும் வழங்குவதில் நாம் இழுத்தடிப்பு செய்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

## சீன நாட்டின் அன்பளிப்பு

# கந்தளாய் கனிஷ்ட பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை அன்பளிப்பு

திருகோணமலை தினகரன் நிருபர்



சீன நாட்டின் "ஊஹான் மாகாண மக்கள் மன்றம்" அன்பளிப்பாக வழங்கிய பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பைகள் திருகோணமலை மாவட்டம், கந்தளாய் கல்வி வலயத்திற்குட்பட்ட தி/கந்தளாய் கனிஷ்ட பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வின் போது, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரளவினால் (06) மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு சீனாவின் ஊஹான் மாகாண மக்கள் மன்றம், கிழக்கு மாகாண மாணவர்களுக்கு வழங்குவதற்கென பாடசாலைப் புத்தகப்பைகளை அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

அயல் நாடுகளுடன் சினேகபூர்வ நட்புறவை பேணுவதை நோக்காக கொண்டு சீன நாட்டு மக்கள் மன்றம் இவ் அன்பளிப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு; சூழலை சுத்தமாக வைத்திருக்க கோரிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருப்பவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் தற்போது பருவகால மழை பெய்து வருவதால் பொத்துவில் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக தமது இடங்களை வைத்து கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

டெங்கொழிப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## திருகோணமலை நாவற்சோலையில்

# பொதுமக்கள் பாவனைக்கு கிணறுகள் புனரமைப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)



திருகோணமலை நாவற்சோலை கிராம மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக கிணறுகள் புனரமைக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

இக்கிராமம் திருகோணமலை முல்லைத்தீவு வீதியில், திருகோணமலை நகரில் இருந்து வடபுறமாக 24 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு 600 குடும்பங்கள் வரையில் வாழ்கின்றன.

இங்கு மக்கள் குடியேறிய போது தொண்டு நிறுவனங்கள் இரண்டு கிணறுகளை அமைத்துக் கொடுத்திருந்தன. அவற்றில் இருந்தே இவ்வூருக்குக் குடிநீர் வழங்கப்படுகின்றது. இந்நீர் மக்களது தேவைக்குப் போதுமானதாக இல்லை.

இந்தச் சூழ்நிலையில் குச்சவெளிப் பிரதேச செயலாளர், இவ்வூர் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக கிணறொன்றை அமைத்துத் தருமாறு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

இவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் பதினைந்து இலட்சம் ரூபா செலவில் 24 அடி ஆழமும் 18 அடி விட்டமும் கொண்ட கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது. கிணற்றை அமைப்பதற்கான நிதியைக் கனடாவில் வாழும் நக்கீரன் ஐயா என அழைக்கப்படும் வேலுப்பிள்ளை தங்கவேலு வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் 'கடந்த காலத்தை மறந்து எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவோம்' செயலமர்வு



நீதி அமைச்சு சாய்ந்தமருது பிரதேச செயலகத்துடன் இணைந்து நடாத்திய கருத்தரங்கொன்று "கடந்த காலத்தை மறந்து எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் (07) இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீகாவின் ஒருங்கிணைப்பில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.ஐ. முஅஂஃபிகா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

உளவளத்துறை ஆலோசகர் ஏ. மனுஸ் வளவாளராகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில், சாய்ந்தமருது இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். சமீலுல் இலாஹி, கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸான், சாய்ந்தமருது கலாசார உத்தியோத்தர் ஏ.தௌபீக் உட்பட சுமார் 60 இளைஞர், யுவதிகள் நிகழ்ச்சியில் பங்கு பற்றி பயனடைந்ததோடு, கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# றம்ஸி குத்தூஸின் தந்தை காலமானார்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



தினகரன் பத்திரிகையின் முன்னாள் உதவி ஆசிரியரும், ஊடகவியலாளருமான றம்ஸி குத்தூஸின் தந்தையும், அக்கரைப்பற்றின் மூத்த உலமாக்களில் ஒருவருமான குத்தூஸ் மௌலவி வெள்ளிக்கிழமை (8) காலமானார்.

இவர், இலங்கையின் தலைசிறந்த உலமாக்களில் ஒருவராகவும், இப்பிராந்திய முஸ்லிம் சமூகம் மற்றும் இளைஞர்கள் வழி தவறக்கூடாது என்பதற்காக அவர்களுக்கு அறிவுரைகளையும், நல்லுபதேசங்களையும் வழங்கியதோடு, ஏனைய சகோதர இனத்தவர்களுடன் இன ஒற்றுமைக்கான ஒருவராகவும் இருந்து மக்கள் மத்தியில் பெரும் நன்மதிப்பை பெற்ற ஒரு உலமா ஆவார்.

06 குழந்தைகளின் தந்தையான அன்னாரின் ஜனாஸா, அக்கரைப்பற்று பட்டினப்பள்ளியில் ஜனாஸா தொழுகை நடாத்தப்பட்டு, தைக்காநகர் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.





சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சிறந்த கவிதைப் போட்டி, சிறந்த சமூக சேவையாளர் போட்டி, சிறந்த சிறுதொழில் முயற்சியாளர் போட்டிகளில் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய சிரேஷ்ட பிரஜைகளை கௌரவிக்கும் நிகழ்வு திருகோணமலையிலுள்ள சிங்கள மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் சிரேஸ்ட பிரஜைகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள்: தோப்பூர் தினகரன் நிருபர்)

## இலுப்படிச்சேனையில்

# காட்டு யானைத் தொல்லைக்கு தீர்வு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்



மட்டக்களப்பு இலுப்படிச்சேனைப் பிரதேசத்தில் பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இலுப்படிச்சேனை வேப்பவெட்டுவான் பிரதான வீதியில் ஒன்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் காட்டு யானை தொல்லைக்கு தீர்வு கோரி இலுப்படிச்சேனை வேப்பவெட்டுவான் பிரதான வீதியை வழி மறித்து சுமார் அரை மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கையில் பதாகையை ஏந்தியவாறு யானைத் தொல்லைக்கு தீர்வு கோரி கோஷங்களை எழுப்பி பெருமளவிலானோர் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் பின் வேப்பவெட்டுவான் இலுப்படிச்சேனை சந்தி வரை பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள். சந்தியிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலுப்படிச்சேனை பிரதான வீதியால் பேரணியாக சென்று கொண்டிருந்தவேளை அவ்வழியால் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் திடீரென வருகை தந்ததை அவதானித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரது வாகனத்தை வழி மறித்தனர்.

தமக்கான பிரச்சினைக்கு தீர்வு பெற்று தருமாறும் காட்டு யானை தொல்லையில் இருந்து தம்மை விடுவிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

வேறு வேலையாக அவசரமாக செல்கிறோம் வரும் போது உங்களை சந்திக்கிறோம் எனத்தெரிவித்து வனஜீவராசிகள் திணைக்கள வாகனம் புறப்பட்டது.

இதன்பின் இலுப்படிச்சேனை வனஇலாகா அலுவலகம் வரை பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள். வனஇலாகா அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகாரிகள் தமது பிரச்சினை தொடர்பில் பதில் கூற வேண்டும் என சுமார் ஒரு மணி நேரம் வாயில் கதவை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்வை பெற்றுத்தருவது தொடர்பாக பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைய ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# அட்டாளைச்சேனை ஸஹ்ரா வித்தியாலயம் முதலிடம்

திராய்க்கேணி தினகரன் நிருபர்



அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 25 பாடசாலைகளில், அட்டாளைச்சேனை ஸஹ்ரா வித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். ஸஹ்ரா வித்தியாலயத்திலிருந்து க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 25 மாணவர்களில் அனைவரும் (100 சதவீதம்) சித்தியடைந்து, உயர்தரம் கற்பதற்கான தகுதியினைப் பெற்றுள்ளனர்.

2018ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 88.7 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்தனர். 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் 100 சதவீதமானோர் சித்திபெற்றனர். 2021ஆம் ஆண்டு 88.88 சத வீதமானோரும், இறுதியாக நடைபெற்ற 2022ஆம் ஆண்டுப் பரீட்சையில் 100 சதவீதமானோரும் சித்தியடைந்துள்ளனர்.

# மண்முனை வடக்கு பிரதேச நலன்புரி சங்கத்தின் 'ஒளிவிழா' நிகழ்வுகள்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மண்முனை வடக்குப் பிரதேச நலன்புரிச் சங்கம் நடத்திய ஒளிவிழா வியாழக்கிழமை (07) பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.

மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி. வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அருட்தந்தை அன்னதாஸ் அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் அருட்பணி ராஜரெட்ணம் அடிகளார் பாலன் யேசுவின் பிறப்புத் தொடர்பில் சிறப்புரையாற்றினார். இதன்போது மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு இப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும் பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்த உலக தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் சனிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லை ஆதீனம், யாழ் ஆயர் இல்லத்திற்கும் விஜயம் செய்தனர். (யாழ். விசேட நிருபர்)

# வடக்கின் உதயம்

## உண்மை, ஒற்றுமை, நல்லிணக்க சுயாதீன ஆணைக்குழுவின், இடைக்கால செயலக செயற்பாடுகள் யாழில் முன்னெடுப்பு



ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய, பாராளுமன்ற சட்டத்தினூடாக ஸ்தாபிக்கப்படவுள்ள உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்துக்கான உத்தேச சுயாதீன ஆணைக் குழுவின், இடைக்கால செயலகத்தின் அங்கத்தவர்கள், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை, கொழும்பிலுள்ள வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் (09.12.2023) சந்தித்து கலந்துரையாடினர். உத்தேச சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி அசங்க குணவன்ச, இடைக்கால செயலகத்தின் கொள்கை பிரிவு தலைவர் கலாநிதி யுவி தங்கராஜா, இடைக்கால செயலகத்தின் சட்டப்பிரிவு உத்தியோகஸ்தர் நிசாந்தெனி ரத்னம், நீதி அமைச்சரின் சட்ட ஆலோசகர் அஸ்வினி அப்பங்கம, உள்ளிட்ட குழுவினர் கௌரவ ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினர். யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கை பிரஜைகளின் முறைப்பாடுகள் தொடர்பில் உண்மையை உறுதி செய்யும் வகையில் நல்லிணக்கம், இழப்பீடுகள் மற்றும் நிலையான அமைதிக்குத் தேவையான வசதிகளை வழங்குவதே உத்தேச சுயாதீன ஆணைக்குழுவின் முக்கிய நோக்கமாக உள்ளது.

உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்துக்கான சுயாதீன ஆணைக்குழுவிற்கு தேவையான சட்டம் மற்றும் கொள்கை கட்டமைப்பு, செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் பணிகளை வட மாகாணத்தில் முன்னெடுப்பது தொடர்பில் குறித்த குழுவினர் வட மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினர்.

## உலக தமிழர் பேரவையின் குழுவினர் யாழ். மறை மாவட்ட குரு முதல்வரை சந்தித்தனர்



**கோப்பாய் குறூப் நிருபர்**

உலக தமிழர் பேரவையின் தலைவர் சுரேந்திரன் தலைமையிலான பௌத்த, கிறிஸ்தவ மதகுருமார்களைக் கொண்ட குழுவினர் (09) யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி ஜெஸ்டின் ஞானப்பிரகாசத்தை ஆயர் இல்லத்தில் சந்தித்தனர்.

குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த உலக தமிழர் பேரவையின் தலைவர், யாழ். மறை மாவட்ட ஆயரை இன்று மதியம் சந்தித்து அவருக்கு நாங்கள் மேற்கொள்ளவுள்ள வேலைத் திட்டம் தொடர்பில் விரிவாக விளங்கப்படுத்தினோம்.

அவர் எமது திட்டத்தினை வரவேற்பதாகவும் மக்கள் மயப்படுத்தப்பட்ட திட்டத்தினை தான் வரவேற்பதாகவும் இந்த திட்டத்தினை செயற்படுத்துமாறும் கோரினார் எனவும் தெரிவித்தார்.

## 25 தமிழக மீனவர்கள் கைது

**யாழ் விசேட நிருபர்**

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து, கடற்றொழிலில் ஈடுபட்ட 25 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கையின் போதே நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள தமிழக கடற்றொழிலாளர்கள் காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணைகள் முன்னெடுத்த பின்னர், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்தனர்.

## உலக தமிழர் பேரவை, பௌத்த பீடங்களின் தலைவர்கள் இணைந்து இமாலயா பிரகடனம் கண்டியில் வெளியீடு




**(அக்குறணை குறூப் நிருபர்)**



உலக தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் தலைமையில் மூன்று நிக்காயாக்களினதும் பௌத்த குருமார்கள் இணைந்து இமாலயா பிரகடனம் என்ற ஒரு பிரகடனத்தை கண்டியில் வைத்து வெளியிட்டனர்.

உலக தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் யுத்த தலைமையிலான மேற்படி குழுவினர் மல்வத்தை மகாநாயக்க தேரர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர், வண. வரகாகொட ஞானரத்ன தேர ர் ஆகியோரையும் சந்தித்து நல்லாசிகள் பெற்றனர். புன்னர் கண்டமி குயீன்ஸ் ஹோட்டலில் ஒரு ஊடக சந்திப்பை நடத்தினர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களது மகளிர் அமைப்பின் தலைவி விசாகா தர்மதாச இதனை ஏற்பாடு செய்திருந்தார். அங்கு ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போது சுரேன் சுரேந்திரன் தெரிவித்ததாவது,

டயஸ்போரா என்ற ஒரு சொல் சிங்கள மக்களுக்கு மத்தியில் பயங்கரவாதிகள் என்ற கருத்தையும் பௌத்தமத குருக்கள் என்றால் தமிழர்களது உரிமைகளை மறுப்பவர்கள் என்றும் தவறான ஒரு கருத்து நிலவுகிறது. காரணம் இரு தரப்பினரும் இணைந்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபடாத காரணத்தினால் இந்நிலைமை தோற்றம் பெற்றிருந்தது.

எனவே மேற்படி இரு தரப்பினரும் இணைந்து பல முறை இது பற்றிப் பேசினோம். நேபாளம், காட்மண்ட் நகரில் சந்தித்து வெளிப்படையாகப் பேசினோம். அதன் பிகாரம் இமாலாயா பிரகடனம் வெளியிடப்பட்டது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கையளித்தோம். மல்வத்தை, அஸ்கிரிய, ராமன்ய, அமரபுர முதலான நிக்காயாக்களின் தலைவர்களிடமும் கைளித்து கலந்துரையாடினோம்.

தற்போது நா ம் அனைவரும் இணைந்து நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற கொள்கையில் இணைந்துள்ளோம். எஸ்ஜே.வி. செல்வநாயக ம் , மு. திருத் செல்வம், ஏ. அமிர்தலிங்கம், சம்பந்தன. சுமந்திரன் என ப ல தலைவர்கள் இது பற்றி 75 வருடங்களாகப் பேசி வருகின்றனர். இன் னும் ஒரு முடிவை எட்டவில்லை. எனவே நாம் இனியும் காலம் தாழ்த்த முடியாது.

எமது இமாலயா பிரகடனத்தில் முக்கியமாக 6 அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. முதலாவதாக நாட்டின் பல்வகைத் தன்மையைப் பேணுதல் என்ற அம்சத்திற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக பொருளாதாரப் பிரச்சினைகளை வெற்றி கொள்வது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாவதாக மாகாண மட்ட அதிகாரப்பரவலாக்கம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நான்காவது ஒன்று பட்ட, பிளவு படாத அதிகாரம் பகிரப்பட்ட ஒரு நாடு பற்றி பேசப்பட்டுள்ளது. ஐந்தாவதாக கடந்த கால கசப்பு அனுபவங்களை மனதிற்கொண்டு அவ்வாறான ஒரு நிலை மீண்டும் ஏற்படாது பார்த்துக் கொள்வது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆறாவதாக பலதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்கள் தொடர்பாக ஏற்று அவற்றைப் பின்பற்றுவது பற்றி பேசப்பட்டுள்ளது. இந்த ஆறு அம்சங்கள் கொண்ட இமாலயாப் பிரகடனத்தில் பின்வருவோர் கையெழுத்திட்டுள்ளனர்.

உலக தமிழ்ப் பேரவை (ஐக்கிய ராஜ்ஜியம்) சார்பாக வேலுப்பிள்ளை குகநேந்திரன், கலாநிதி சாந்தினி ஜெயராஜா, உலக தமிழ்ப் பேரவை (ஐக்கிய அமெரிக்கா), தனபாலசிங்கம் சுரேந்திரன், உலக தமிழ்ப் பேரவை (ஐக்கிய ராஜ்யம்), சிறிகாந்தன் பவகுகன் உலக தமிழ்ப் பேரவை (ஐக்கிய ராஜ்யம்), கலாநிதி கண்ணப்பன் முகுந்தன், உலக தமிழ்ப் பேரவை(அவுஸ்திரேலியா), பிரகாஷ் ராஜசுந்தரம் உலக தமிழ் பேரவை (அவுஸ்திரேலியா) ராஜ் நவரட்னசிங்கம், உலக தமிழ் பேரவை (கனடா) ஆகியோரும் வண. தேரர்களான வண. மாதம்பே அசாதி திஸ்ஸ, வண. சியம்பலாகஸ்வெவ விமசார, கிதலகம ஹேமசார, பேராசிரியர் பல்லேகந்த ரத்னசார, கலுபான பியரத்ன, நாரம்பனாவே தம்மாலோக்க, வலதர சோபித்த ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர். அத்துடன் சுரேந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு வருகை தந்து பல் வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியதுடன், சர்வமத தலைவர்க ளையும் சந்தித்து கலந்துரையாடியதாகவும் குறிப்பிட்டார்.

மேற்படி பிரகடனத்தை நடைமுறைப் படுத்துவதற்கு மதகுருமார்களுடன் ஒன்று சேர்ந்து 25 மாவட்டங்களுக்கு சென்று இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வினை முன்வைப்பதாகும் என்றார். அஸ்கிரிய பீட மகாநாயக்கத் தேரரை நாங்கள் சந்தித்தபோது பல விடயங்களை கூறினர்.

அதாவது சகோதரத்துவம் சமதர்மம் சமாதானம் என்ற அடிப்படையில் வேலை செய்தால் இலங்கை என்ற நாட்டில் பிரச்சினைகள் இருக்காது.

நீங்கள் இப்படி மக்களிடம் செல்லப் போவதை நான் வரவேற்கிறேன் எனவும் தெரிவித்தார். அதேபோல மல்வத்து பீட மகாநாயக்க தேரர், போர்க்காலத்தில் கூட தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்திப்பதற்காக ஆறு தடவை முயற்சித்ததாகவும் அதற்கு அரசாங்கம் அனுமதி மறுத்ததாகவும் தெரிவித்தார்.

## முல்லைத்தீவு பண்ணைகளை பதிவுசெய்து பயன்பெற அழைப்பு

**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட பண்ணையாளர்கள் மாடுகளுக்கான பண்ணைகளை பதிவு செய்து உச்ச பயன் பெற்றுக்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பிரதிப்பணிப்பாளர் கிருஜகலா சிவானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கமைய அவர் விடுத்துள்ள கோரிக்கையில், பண்ணையாளர்கள் தமது மாட்டுப் பண்ணைகளை பதிவுசெய்ய வேண்டியதும் தங்களால் வளர்க்கப்படும் சகல மாடுகளுக்கும் காதுப்பட்டி பொருத்துதலும் மிக முக்கியமானதாக அறிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள பண்ணைகளில் மாடுகளின் பண்ணைகள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும் என்பது 2008ம் ஆண்டில் இருந்தே முக்கிய விடயமாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பல பண்ணையாளர்கள் இதில் ஆர்வமற்று இருந்து வருகின்றனர்.

குறிப்பாக விலங்குகளுக்கு காது இலக்கம் பொருத்தப்பட்டு பண்ணைகள் பதிவு செய்வதனால் பண்ணையாளர்களுக்கு மட்டுமே திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகளை வழங்கும் திட்டமும் வெகுவிரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## சாவகச்சேரியில் மோதலில் ஈடுபட்ட 3பெண்கள் உட்பட 7 பேர் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி நகரப் பகுதியை அண்மித்த குடியிருப்பு பகுதி ஒன்றில் வெள்ளிக்கிழமை பிற்பகல் மோதலில் ஈடுபட்ட 3பெண்கள் உட்பட ஏழு பேர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குடும்பத் தகராறு காரணமாக இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மோதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் பொலிஸார் 7 பேரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மலைச்சாரல்

## மதில்சுவர் சரிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் பலி

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

அலவதுகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்குறணை தொடங்கொள்ள பகுதியில் வீதியோரமாக காணப்பட்ட மதில்சுவர் ஒன்று சரிந்து விழுந்ததில் 59வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மலையகத்தில் தற்போது பெய்து வரும் அடை மழை காரணமாக அக்குறணை நகரம் நேற்று முன்தினம் நீரில் மூழ்கி இருந்தது. இந்நிலையில் காலம் சென்ற நபர் இரவு 7மணியளவில் தனது வீட்டிற்கு குறுக்கு வீதியினூடாக நடந்து சென்று கொண்டிருந்த போது வீதியோரமாக காணப்பட்ட மதில் சுவரொன்று திடீரென அவர் மீது சரிந்து வீழ்துள்ளதால் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.






கண்டி இந்திய உதவித் தூதரகம் ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டினை குறிக்கும் முகமாக நூற்றாண்டு முத்திரை வெளியீட்டு விழா கண்டி அம்பிட்டியவில் அமைந்துள்ள "கோல்டன் கிரவுன் ஹோட்டலில் " கண்டி உதவி உயர்ஸ்தானிகர் டாக்டர் எஸ்.ஆதிரா தலைமையில் விமர்சையாக நடைபெற்றது. இவ் விழாவில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பார்க்லே, மத்திய மற்றும் ஊவா மாகாண ஆளுநர்களான லலித் யூ கமகே, ஏ.ஜே.எம்.முஸம்மில், கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார், பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், பிரதி தபால் மா அதிபர், கண்டி மாவட்ட செயலாளர், வேடுவ பிரஜைகளின் தலைவர், வர்த்தக பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## பொது அறிவித்தல்

**2007ம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 242 ஆவது பிரிவுக்கு அமைய கூட்டிணைவு**

2007ம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 244(3) ஆவது பிரிவுக்கு அமைய கொடோல்ட்ஸ் குளோத்திங் லங்கா (பிரைவட்) லிமிட்டட், கொடோல்ட்ஸ் குளோத்திங் ராஜாங்கனய (பிரைவட்) லிமிட்டட் மற்றும் கொடோல்ட்ஸ் குளோத்திங் வட்டவள (பிரைவட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்கள் 242 ஆவது பிரிவுக்கு அமைய கொடோல்ட்ஸ் குளோத்திங் லங்கா (பிரைவட்) லிமிட்டட் என்ற பெயரில் ஒற்றை நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டிருப்பதோடு சட்டத்தில் குறிப்பிட்டு கூறப்பட்டிருக்கும் தேவைகளுக்கு அமைய கூட்டிணைவு செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டிணைவு அமுல்படுத்தப்பட்ட திகதி: 2023/10/01

சபையின் உத்தரவுக்கு அமைய
டிலொயிட் கோபரேட் சர்விசஸ் (பிறைவெட்) லிமிடெட்
செயலாளர்
3ஆவது மாடி, 11, காசல் ஒழுங்கை, கொழும்பு - 04

## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.10.02ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி.எம்.பீ.டி.ஆர்.சிறிவர்தன அத்தாட்சிப்படுத்திய 2021.09.17ஆம் திகதியிடப்பட்ட 1382ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் இலக்கம் 59/1, வேஹேரயாய, எதிலிவெவ, வெல்லவாய எனும் முகவரியைச் சேர்ந்த திரு.லங்கா கீகணகே லீல் சுசந்த என்பவர் பெற்றுக்கொண்ட கடன் வசதி மீது 2023.08.18ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 18,014,883.79 ரூபாயும் (பதினெட்டு மில்லியன் பதின்நான்காயிரத்து எண்நூற்று எண்பத்து மூன்று ரூபாய் எழுபத்து ஒன்பது சதம்) அத்துடன் 2023.08.19ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரையில் 13,118,092.42 ரூபாய் (பதின்மூன்று மில்லியன் நூற்றுப் பதினெட்டாயிரத்து தொண்ணூற்று இரண்டு ரூபாய் நாற்பத்திரண்டு சதம்) மீது ஆண்டுக்கு (27.75%) இருபத்தேழு தசம் ஏழு ஐந்து என்ற வீதத்திலான மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளது.

2. பிரசித்த நொத்தாரிசு திருமதி.எம்.பீ.டி.ஆர்.சிறிவர்தன அத்தாட்சிப்படுத்திய 2021.09.17ஆம் திகதியிடப்பட்ட 1382ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் நிலுவையாகவுள்ள 18,014,883.79 ரூபாயையும் (பதினெட்டு மில்லியன் பதின்நான்காயிரத்து எண்நூற்று எண்பத்து மூன்று ரூபாய் எழுபத்தொன்பது சதம்) அத்துடன் 2023.08.19ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்ட மேலதிக வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3 விஹார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித.கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பல்லேகட்டுவ கிளையின் முகாமையாளருக்கு இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

"வெடராலகே பிட்டகொரடுவ" என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.சிறிபத்தன தயாரித்த 1999.09.13ஆம் திகதியிடப்பட்ட (இருப்பினும் 1999.08.13 என பதியப்பட்டுள்ளது) 1493 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 05 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அங்குள்ள கட்டடங்கள், மரங்கள் மற்றும் அனைத்துடனும் தென்மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், கிறுவாபற்று தெற்கு, தங்கல்லை நகரசபை எல்லைகளுள் இலக்கம் - 270 இன்டிபொகுனகொட வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், 118/2, இன்டிபொகுனகொட வீதி எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தில் இன்டிபொகுனகொடவில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் வெடராலகே பிட்டகொரடுவ என அறியப்படும் காணியில் துண்டு A ஐயும் கிழக்கில் வீதியையும் தெற்கில் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 7 மற்றும் வீதியையும் மேற்கில் குறித்த வரைபடத்தில் துண்டு 4ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது ஒரு ரூட் மற்றும் எட்டு பேர்ச்சுகள் (ஏ0. ஆர்1.பே8) பரப்பளவுடன் மேற்குறிப்பிடப்பட்ட 1493 ஆம் இலக்க வரைபடத்தின்படி G 116/69 எனும் இலக்கத்தின் கீழ் தங்கல்லை காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி**
**பல்லேகட்டுவ**

**திரு.ஜீ.வி.குமார**
**முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 220,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2023 டிசெம்பர் 13 ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124C151 | LKA18224F144 | LKA36424L138 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 70,000 | 75,000 | 75,000 | 220,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 டிசம்பர் 13
தீர்ப்பனவுத் திகதி : 2023 டிசம்பர் 15
வழங்கப்படும் திகதி : 2023 டிசம்பர் 15
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 டிசம்பர் 13. புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறீப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| கொமர்ஷல் பாங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்ளவனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

Repeat Your Ad For Better Offers

## மன்னிப்பு கோருதல்

கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவில் கிரம, புவக்கஸ் ஆர, ஹொரகந்தஹேன, சுஜித் இல்லத்தில் வசிக்கும் பிரதாபகே பசிந்து புத்தீப ஆகிய நான், எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் RR 1485/23 ஆம் இலக்கத்தின் கீழ் உள்ள வழக்கில் 2015 ஆண்டின் 5ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 54ஆம் அத்தியாயத்தை மீறி GABICA எனும் வர்த்தக நாமத்தில் காணப்படும் 26 மாத்திரைகளை அனுமதியின்றி தம்வசம் வைத்திருந்த குற்றத்திற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சகல பொதுமக்களிடம் மன்னிப்பு கோருகின்றேன். இனிமேல் இவ்வாறான குற்றத்தை செய்யமாட்டேன்.

**பிரதாபகே பசிந்து புத்தீப**

2015 ஆண்டு 5 இலக்க தேசிய மருந்து கண்காணிப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் நீதிமன்ற உத்தரவின் படி

**இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்புக் கோரல்**

குருநாகல் நீர்கொழும்பு வீதியில் மல்காடுவாவையில் அமைந்துள்ள ஜி பாமா மருந்தகத்தின் (பாமசியில்) ரெஜினா இஸபெலா பேனன்டஸ் இன் உரிமையாளரும் மருந்தாளர் ரத்னாயக முதியன்சேலகே தம்மிகா பியதர்சனி மருந்தக உதவியாளர் நாமாவோம்.

மேற்குறிக்கப்பட்ட மருந்தகத்தில் வைத்தியரின் சிபாரிசு மருந்துப்பட்டியல் இன்றி கொக்சசலின் (Cloxacillin) எனும் மருந்தை விணியோகித்தல், மருந்தக அதிகாரியின் நேரடி மேற்பார்வை இன்றி மருந்துகளை விணியோகிக்காமை மருந்தாளர் என்ற வகையில் பொறுப்புக்களை உதாசீனம் செய்தல் தொடர்பாக குருனாகல் மாவட்ட உணவு மற்றும் மருந்து பரீட்சகர் திரு ஆர்.எஸ்.பி.பி.கே. இராஜபக்ஷ அவர்களால் குருநாகல் நீதவான் நீதிமன்றத்தில் 87879 இலக்கத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலே கூரிய குற்றச்சாட்டுகளுக்கு கௌரவ நீதிமன்றம் 2023/10/13 ஆம் திகதி எங்களுக்கு ரூ. 40,000/= (நாற்பதாயிரம் ரூபா) தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகிறோம். இதுபோன்ற தவறுகள் இனி மேலும் நடைபெறமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் நடைபெற்ற இத்தவறு தொடர்பாக இலங்கை மக்களிடம் மண்ணிப்புக் கோரிக்கொள்கிறோம்.

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு-10**

**இலங்கை தேசிய வைத்தியசாலையின் தேவைப்படுத்தல்களுக்காக கீழுள்ள அம்சங்களை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| | விபரம் | எண்ணிக்கை | குறிப்பீட்டு இல. |
|---|---|---|---|
| 1. | Laundry Soap | 45,000 | SI/10/2023[p |
| 2. | Toilet Soap | 35,000 | SI/10/2023 |
| 3. | 72" Blue Sheeting | 10,000m | SF/19/Blue Sheeting /2023 |

மேலேயுள்ள வழங்கலுக்காக தகைமையுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இது தொடர்பான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு இயலும் என்பதுடன் சவர்க்கார இனங்களுக்காக 4500 ரூபா மீளளிக்கப்படாத வைப்புத் தொகையையும் 72'' நீல நிற ஷீட்டிங் துணிக்கு மீளளிக்கப்படாத 4500 ரூபாவையும் தனித்தனியாக இலங்கை தேசிய வைத்தியசாலை சிறாப்பர் பிரிவில் செலுத்திய பின்னர், 2023.12.11 ஆம் திகதியிலிருந்து 2024.01.02 ஆம் திகதியன்று வரையும் (இரு நாட்களும் அடங்கலானவை) வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையுமான காலப்பகுதியில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து கேள்வி நிபந்தனைகளுடான விண்ணப்பத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

2024.01.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கூறுகள் திறக்கப்படும்.

**மருத்துவ நிபுணர் டபிள்யு. கே. விக்கிரமசிங்ஹ,**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**பிட்டிபன வளாளக தொழில்நுட்பப் பீடத்தின் திண்மக் கழிவுகளை அப்புறபடுத்தல் மற்றும் சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகள், தோட்டப் பராமரிப்பு சேவைகளை வழங்குதல்**

**ஒப்பந்த இல. USJP/EIS/CL/FOT/2024/2025**

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் தொழில்நுட்பப் பீடத்தின் திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்தல் மற்றும் சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகள், தோட்டப் பராமரிப்பு சேவைகளை நடாத்திக் கொண்டு செல்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகிறார்.
2. மேற்படி சேவைக் காலம் ஒரு வருடமாகும்.
3. இந்தக் கேள்விச் செயற்பாடுகள் தேசிய போட்டி கேள்வி கோரல் ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும்.
4. இதுதொடர்பில் ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த சேவை வழங்குநர்கள் 011-2802856 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர், நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் 2023 டிசம்பர் 11ஆம் திகதி முதல் 2024 ஜனவரி 01ஆம் திகதி வரையில் பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. இது தொடர்பில் ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த சேவை வழங்குநர்கள் 2023 டிசம்பர் 11ஆம் திகதி முதல் 2024 ஜனவரி 01ஆம் திகதி வரையான காலத்தில் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிப்பதன் பேரில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஆறாயிரம் (6,000.00) ரூபாவையும் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இக்கொடுப்பனவை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும்.
6. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்திலுள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் 2020-11-24ஆம் திகதி பி.ப. 01.30 மணிக்கு பெறுகைக்கு முன்னரான தெளிவுபடுத்தல் கூட்டம் இடம்பெறும்.
7. நிர்வாகக் கட்டிடத்தில் அமைந்துள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட அறையில் 2024 ஜனவரி 02ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வதற்கான நேரம் முடிவடைந்தவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் (ஒரு விலைமனுதாரருக்கு ஒரு பிரதிநிதி வீதம்) விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.
8. விலைமனுக்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதியைக் குறிப்பிடுதல் வேண்டும். முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024 டிசம்பர் 02ஆம் திகதி பி.ப. 02.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் நுகேகொட, கங்கொடவிலயில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர், நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
10. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் முதல் 2024 ஏப்ரல் 02ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும்.
11. ஒவ்வொரு விலைமனுவுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் பெயருக்கு வழங்கப்பட்ட 2024 மே 03ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் 300,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. தெரிவு செய்யப்படும் சேவை வழங்குநர் நாட்டில் நிலவும் தொழிலாளர் சட்டங்களின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.

**மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான இயைபான முகவரியானது:**
**விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்தல், விலைமனு ஆவணங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் விலைமனு ஆவணங்களை அனுப்புவதற்கான முகவரி:**
உதவிப் பதிவாளர்,
நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்) பிரிவு,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,
கங்கொடவில,
நுகேகொடை.

**விலைமனுக்கள் திறக்கப்படும் முகவரி:**
பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபம் (நிர்வாகக் கட்டிடம்),
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,
கங்கொடவில,
நுகேகொடை.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**2023-12-11**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**களனி பல்கலைக்கழகம் – களனி**

களனிப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் சேவைகளை 2022/2023(2024) கல்வி ஆண்டுகளில் நடாத்திக்கொண்டு செல்வதற்காக போதுமான அளவு நிதி வசதிகள் மற்றும் குறித்த துறைகளில் அனுபவம் வாய்ந்த நபர்களிடம் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 1 | கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர ஆண்கள் தங்கும் விடுதி சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையம் |
| 2 | பண்டாரநாயக்க மகளிர் தங்கும் விடுதி சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையம் |
| 3 | யக்கடுவே ஸ்ரீ பிரஞ்ஞாராம தங்கும் விடுதி சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையம் |
| 4 | புதிய மகளிர் தங்கும் விடுதி சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையம் |
| 5 | விஞ்ஞான பீட சிற்றுண்டிச்சாலை |
| 6 | தொழில்நுட்ப பீட சிற்றுண்டிச்சாலை |
| 7 | மாணவர் ஓய்வறை சிற்றுண்டிச்சாலை |
| 8 | மாணவர் நிலைய சிற்றுண்டிச்சாலை |
| 9 | பணியாளர் தொகுதி சிற்றுண்டி விற்பனை கூடம் |
| 10 | பணியாளர் தொகுதி பழரச விற்பனைச் சாலை |
| 11 | மாணவர் நிலைய பழரச விற்பனைச் சாலை |
| 12 | மாணவர் ஓய்வறை பாற்சாலை |
| 13 | பல்கலைக்கழக பாற்சாலை |
| 14 | தொழில்நுட்ப பீட சிற்றுண்டி மற்றும் பான சாலை |
| 15 | பல்கலைக்கழக விற்பனை நிலையம் |
| 16 | பல்கலைக்கழக ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் |
| 17 | பல்கலைக்கழக சிகைஅலங்கார நிலையம் |
| 18 | மாணவர் நிலையத்திற்கான புகைப்படப்பிரதி சேவை |
| 19 | நூலக புகைப்படப் பிரதி சேவை |
| 20 | தொழில்நுட்ப பீட புகைப்படப்பிரதி சேவை |
| 21 | பல்கலைக்கழக புத்தகசாலை |
| 22 | மருத்துவ பீட பிரதான சிற்றுண்டிச்சாலை |
| 23 | மருத்துவ பீட பாற்சாலை |
| 24 | மருத்துவ பீட விற்பனை நிலையம் |
| 25 | மருத்துவ பீட புகைப்படப்பிரதி சேவை |

கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் அதற்குரித்தான ஏனைய விபரங்களை 2023-12-12ஆம் திகதி முதல் 2024-01-02ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / மாணவர் சேவைகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதன் பொருட்டு மீளளிக்கப்படாத 500.00 ரூபா கேள்வி வைப்புத் தொகையை பல்கலைக்கழகச் சிறாப்பருக்குச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்து 2024-01-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / மாணவர் சேவைகள் அவர்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பல்கலைக்கழகத்தின் மாணவர் சேவைகள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். மேலதிக விபரங்களை 011 2903125 எனும் தொலைபேசி இலக்கத்தில் மாணவர் சேவைகள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

விசேட விடயம்: கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மற்றும் யக்கடுவே ஸ்ரீ பிரஞ்ஞாராம தங்கும் விடுதி சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையத்தை செயற்படுத்துவதற்காக பொருத்தமான விண்ணப்பதாரர்கள் முன்வராவிட்டால் முறையாக மாணவர் நிலைய சிற்றுண்டிச்சாலை மற்றும் பண்டாரநாயக்க தங்கும் விடுதி சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையங்களை செயற்படுத்துவதற்காக தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் மேற்கூறிய சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையத்தை செயற்படுத்திக் கொண்டு செல்வதற்கு இணங்குதல் வேண்டும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்.**
**2023-12-11.**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want



- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01. | மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகமவிலிருந்து நாகலகமுவ பிரிவு வரையும் தற்போதுள்ள வரிசை வேலியின் புனர்நிர்மாணம் கேள்வி இல.: rda/wom&m/ RoW-REP/CE/2023/31 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.12.11 ஆம் திகதியிலிருந்து 2024.01.02 ஆம் திகதியன்று வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் இணையபக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், EOM&M பிரிவு பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

## கேள்வி இல.: 01/03.01.2024

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் வெளியக ஒளிபரப்பு (OB) வேனுக்கு HD 1ME DIGITAL VIDEO PRODUCTION SWITCHER SYSTEM ஒன்றின் பெறுகை

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தானத்தின் வெளியக ஒளிபரப்பு (OB) வேனுக்கு **HD 1ME DIGITAL VIDEO PRODUCTION SWITCHER SYSTEM** ஒன்றின் பெறுகைக்காக இலங்கை, கொழும்பு7, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத்தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

உயர் தரத்திலான ஒளிபரப்பு உபகரணங்களின் உற்பத்தியாளர்கள், தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் இக்கேள்வியில் பங்குபற்றலாம். 2024-01-02ஆம் திகதி அல்லது அதற்கு முன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பித்ததன் பின் இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபாவை (ஐயாயிரம் ரூபா) இக்கூட்டுத்தாபன பிரதான கணக்காளரிடம் செலுத்துதல் வேண்டும். 2024-01-02ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக அலுவலக நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும்) கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரின் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்வி ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு அனைத்துக் கேள்விகளுடனும் விலைமனுப் பிணையொன்று (வங்கி உத்தரவாதம்) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உற்பத்தியாளர்களின் சார்பாக இக்கேள்வியில் பங்குபெறுவதற்கு அதிகாரமளிக்கப்படுவதற்காக முதன்மையாளர்களினால் வழங்கப்பட்ட தரஅங்கீகார/அற்றோணித்தத்துவ கடிதமொன்றை சமர்ப்பிக்குமாறு முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

FOB விலையில் முகவர் தரகுப்பணம் ஏதாவது உள்ளடக்கப்பட்டிருப்பின், அத்தொகையானது தனியாக காட்டப்படல் வேண்டும்.

2024-01-03ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை (தேவைப்படின்) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பிரதிப்பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி : +94 112 580 136/ தொலைநகல் +94 112 500373)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07**
**இலங்கை.**
**(SLRC Website : http://www.rupavahini.lk)**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

KY-2045 MICRO PANDA 2014 CAR, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 295 8 . 081557

### 108 நிஸான் கார் விற்பனைக்கு

65-8076 NISSAN SUNNY 1997 CAR, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 295 8 . 081558

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

HH-5937 BAJAJ 2003, THREE WHEELER அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 070599916 3 . 081555

QX-7215 BAJAJ 2010, QG-0414 BAJAJ 20 06, THREE WHEELE R அ தி யுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1121081 0 . 081573

## வேலைவாய்ப்பு

### 325 தொழில்துறை பொது

சாதாரண பராமரிப்பு நிலையத்திற்கு நோயாளர்களை பார்த்துக் கொள்வதற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தினச் சம்பளம் ஒரு நாளைக்கு ரூ. 2000/ = தேவைப்படும் ஆவணங்கள் கிராம அலுவல ர் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் இன்றே அழையுங்கள். 0776315983, 07 66542999, 07 52306797, 0117604526. 080704

**Repeat Your ad For Better Offers**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல: கேகா/காணி/சுவீ/ஏ3/01/116**
**காணி அமைச்சின் குறிப்பு இல: 4-3/06/2018/ஏச்டபிள்யு/141**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி/காணிகளை கேகாலை கடவையில் நடைபாதை மற்றும் பக்க வாய்க்கால் நிர்மாணிப்பதற்காக அரசு சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2023.11.15 ஆம் திகதிய 2358/47ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி 111 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கேகாலை |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 51ஈ, கொலஹல |
| கிராமத்தின் பெயர் | : பிட்டிஹூம (கேகாலை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரிவு இல. 8) |
| காணியின் பெயர் | : ஹிட்டினவத்தை, வரிமதிப்பீட்டு இல. 185, பண்டாரநாயக்க மாவத்தை |
| வரைபட இல. மற்றும் துண்டு இல: | : கா. 3851, துண்டு இல. 01 |

**எம்.எம்.பி. பிரியங்கனி**
**பெதங்கொட**
**பிரதேச செயலாளர்,**
**கேகாலை.**

**கேகாலை பிரதேச செயலகம்,**
**08/12/2023**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

### நீர்ப்பாசன அமைச்சு

## நீர்ப்பாசனத் திணைக்களம்

## காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை செயற்றிட்ட அடையாளம் – P 160005 / கடன் இலக்கம் : IBRD-89960

### விலைக்கோரல் இலக்கம்: CResMPA/RP/WORKS/ID-ANU/NCB/015 & 024

1. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை கிரயச் செலவிற்காக மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தவுள்ளது. தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அனுராதபுரம்- நீர்ப்பாசனப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த பொதி இலக்கம் | வேலையின் பெயர் | மாவட்டம் | முடிவுறுத்தும் காலம் (நாட்கள்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) | விலைக்கோரல் பிணை முறி | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (இல. ரூபா) | காலம் (நாட்கள்) | |
| CResMPA-I/ RP/WORKS/ ID-ANU/ NCB/015 | ஹுருலுவெவ பிரிவிலுள்ள வீதியில் ஹுருலுவெவ பிரதான கால்வாயின் இடதுகரை மற்றும் உல்பத்கம வயற் கால்வாயை (FC 04) மேம்படுத்துதல் | அனுராதபுரம் | 180 | C6 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 190,000.00 | 105 (2024-04-17ஆம் திகதி வரை) | 77 |
| CResMPA-I/ RP/WORKS/ ID-ANU/ NCB/024 | அனுராதபுரத்தில் உள்ள கல்லயஞ்சிய குளத்தின் சேதமடைந்துள்ள பகுதியை புனரமைத்தல் | அனுராதபுரம் | 270 | C6 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 320,000.00 | 105 (2024-04-17ஆம் திகதி வரை) | 77 |

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அனுராதபுரம் - நீர்ப்பாசன பணிப்பளரிடம் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| மாவட்டம் | நீர்ப்பாசன அலுவலக வரம்பு / மாவட்டம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| அனுராதபுரம் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், அனுராதபுரம் | விமான நிலைய வீதி, அனுராதபுரம் | 025-2222319 |

5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதிக்கு மேலதிகமாக சித்திகரமான விலைமனுதாரர் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பம், சட்டபூர்வம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-12-12ஆம் திகதி முதல் 2024-01-02ஆம் திகதி வரையில் ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத 8.000.00 ரூபா கட்டணத்தை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் அனுராதபுரம், விமான நிலைய வீதி, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் அனுராதபுரம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையிலிடப்பட்ட விலைமனுக்களை நகல் பிரதிகளுடன் 2024-01-03ஆம் திகதி பி.ப. 03.00 மணி அல்லது அதற்கு முன் ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனத் திணைக்களம், விமான நிலைய வீதி, அனுராதபுரம்" எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். (விலைமனுக்களைச் சமர்ப்பிப்பக்கும் நோக்கத்திற்காக மட்டும்) அல்லது அனுராதபுரம், நீர்ப்பாசனப்பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுணத்தல் நேரத்தின் பின் அனுராதபுரம் - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
8. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் செல்லுபடியாகும் வகையில் (விலைமனுக்கள் செல்லுபடிக் காலம் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது) விலைக்கோரல் பிணைமுறியொன்று (விலைக்கோரல் பிணைமுறியின் செல்லுபடிக் காலம் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது) மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு அனுராதபுரம் - நீர்ப்பாசனப் பொறியியலாளரின் பெயரில் விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுடனான விலைக்கோரல் பிணை முறிகள் அற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| மாவட்டம் | வேலையின் பெயர் | வேலைத் தள விஜயத்திற்கு உதவும் பிரதேச பொறியியலாளர் | வேலைத் தள விஜயம் (திகதி மற்றும் நேரம்) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (திகதி மற்றும் நேரம்) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| அனுராதபுரம் | ஹுருலுவெவ பிரிவிலுள்ள வீதியில் ஹுருலுவெவ பிரதான கால்வாயின் இடதுகரை மற்றும் உல்பத்கம வயற் கால்வாயை (FC 04) மேம்படுத்துதல் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஹுருலுவெவ 025-2258207 | 2023-12-22ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | 2023-12-22ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அனுராதபுரம் |
| அனுராதபுரம் | அனுராதபுரத்தில் உள்ள கல்லயஞ்சிய குளத்தின் சேதமடைந்துள்ள பகுதியை புனரமைத்தல் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் 025-2222587 | 2023-12-22ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | 2023-12-22ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அனுராதபுரம் |

9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் அனுராதபுரம் - நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெறும். (திகதி மற்றும் நேரம் என்பன மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன.) வளமுள்ள விலைமனுதாரர்கள் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரதேச பொறியியலாளரின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம் (திகதி மற்றும் நேரம் என்பன மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன.) மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.
10. பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாகும். பிராந்திய பெறுகைக் குழு தனது சொந்த விருப்பத்தில் ஒன்றை அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**அனுராதபுரம்.**

**திகதி: 2023.12.11**

# ஏலத்திற்கான அழைப்பு

## வ/ப சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு

## மாதாந்த அடிப்படையில் வாகன சேவைக்கான விலைமனு கோரல்

வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவை கீழ் குறிப்பிடப்படும் இடங்களிலிருந்து போக்குவரத்து சேவைக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் இரண்டு வருட ஒப்பந்தத்திற்கு சாரதி மற்றும் எரிபொருளுடன் வாகன சேவையை பெற்றுக்கொள்வதற்காக மூடப்பட்ட விலைமனுக்களை கோரியுள்ளது.

| இல. | விபரம் | விலை மனு இலக்கம் | வாகன வகை | ஏலபத்திரம் விநியோகிக் கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | ஏல விண்ணப்பங்கள் பொறுப்பேற் கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | ஏல விண்ணப்பங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ஊழியர் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்காக (நாளாந்த அடிப்படையில்) | | | | | |
| 1.1 | கொழும்பு போக்குவரத்து வழி சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் இருந்து ஊழியர்களை அழைத்து வருதல், அழைத்துச் செல்லல். (பயண வழி கி.மீ 15) | ITN/Q/ 77/2022 | 54 ஆசனங்களை கொண்ட பயணிகள் பஸ் வண்டி - 2010 அல்லது அதன் பின்னர் தயாரிக்கப்பட்டது. | 2023.12.27 பி.ப 3.00 வரை | 2023.12.28 பி.ப 2.00 வரை | 2023.12.28 பி.ப. 2.30 வரை |
| 02 | ஒளிபரப்பு நிலையங்களுக்கான மாதாந்த வாடகை அடிப்படையில் | | | | | |
| 2.1 | யடியாந்தொட்ட மலல்பொலயில் அமைந்துள்ள யடியந்தொட்ட ஒளிபரப்பு நிலையத்திற்கு | ITN/Q/ 50/2023 | 4 கதவுடைய 4WD கெப் வாகனம் குளிரூட்டப்படாதது - 1995 அல்லது அதற்கு பின்னர் தயாரிக்கப்பட்டது. (மாதம் ஒன்றுக்கு எதிர்பார்க்கப்படும் கி.மீ எண்ணிக்கை 1750) | 2023.12.27 பி.ப. 3.00 வரை | 2023.12.28 பி.ப. 2.00 வரை | 2023.12.28 பி.ப 2.45 வரை |

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் உத்தியோகத்தரை தொடர்புகொள்ளவும்
செனரத் பண்டார (செயற்பாட்டு முகாமையாளர்)- **070 3611 486**

- விளம்பரம் வெளியான தினத்தில் இருந்து 21 நாட்களுக்குள் இதற்கான உங்களது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
- லங்கா சதொச கட்டிட குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானமாகும்.

**தலைவர், லங்கா சதொச லிமிடட்,**
**சதொச பொதுச் செயலாளர் அலுவலகம்,**
**இலக்கம் 27, தலைவர் அலுவலகம், 5ஆவது மாடி, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# மாவட்டச் செயலகம் – பதுளை

01. பதுளை மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் வழங்கலை மேற்கொள்வதற்காக மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்துகொண்டுள்ள தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வேலையின் பெயர் | விசேடக் குறிப்பு | சராசரி மதிப்பீட்டுத் தொகை (வெட் இன்றி) ரூபா. மில். | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (விலைமனுப் பிணை) பணமாக / இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பிணை முறி மூலம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பணமாக (ரூ.) | வங்கி முறியாக (ரூ.) |
| 1 | மஹியங்கனை மற்றும் ஹாலிஎல புதிய பிரதேச செயலகக் கட்டிடத்தின் கூட்ட மண்டபத்திற்கு கதிரைகளைக் கொள்வனவு செய்தல் | குறித்த கதிரைகளை மஹியங்கனை மற்றும் ஹாலிஎல பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கொண்டுவந்து கொடுத்தல் வேண்டும் | 14.5 | 3500.00 | 72500.00 | 145000.00 |

02. பெறுகை நடவடிக்கைகள் சந்தை விலைக்கோரல் கேள்வியிடல் முறையின் கீழ் செயற்படுத்தப்படும்.

03. மேற்குறிப்பிடப்பட்ட வழங்கல்களுக்கு இயைபான விலைமனு ஆவணங்களை 2023-12-04ஆம் திகதி முதல் 2023-12-18ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையிலும் 18ஆம் திகதி 09.00 மணித்தியாலம் முதல் 12.00 மணித்தியாலம் வரையான காலத்தினுள் அலுவலக நேரத்தினுள் மீளளிக்கப்படாத விலைமனு வைப்பை மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பதுளை மாவட்டச் செயலகக் கட்டிடத்தொகுதியின் 3வது மாடியில் உள்ள நிதி முகாமைத்துவப் பிரிவிற்குச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

04. மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை இலங்கை வங்கி, பதுளை கிளையில் பேணப்படும் 7042240 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவாகும் வகையில் எந்தவொரு வங்கிக் கிளையிலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் ஏனைய ஆவணங்களை மாவட்டச் செயலக நிதி முகாமைத்துவப் பிரிவிற்கு சமர்ப்பிப்பதன் பேரில் பிரதிநிதியொருவர் மூலம் அல்லது கூரியர் சேவை மூலம் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஒவ்வொரு வேலைக்காகவும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் படிவங்களை ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறு கடித உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரை பொறித்து ''தலைவர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், பதுளை'' எனும் முகவரிக்கு 2023-12-18ஆம் திகதி 2.00 மணித்தியாலத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பதுளை மாவட்டச் செயலக கட்டிடத்தொகுதியின் 3வது மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம்.

06. தபாலில் ஏற்படும் தாமதம் தொடர்பில் பெறுகைக் குழு எவ்வித பொறுப்பும் கூறமாட்டாது என்பதுடன் தாமதமாகிக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. 2023-12-18ஆம் திகதி 15.00 மணித்தியாலத்தில் பதுளை மாவட்டச் செயலகக் கட்டிடத்தொகுதியின் 5வது மாடியில் அமைந்துள்ள மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இதன்பொருட்டு நீங்களோ அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவரோ கலந்து கொள்ளலாம்.

08. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது குறித்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விலைமனுப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியைப் பெறுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் 2023-12-25ஆம் திகதிக்கு முன் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமையான எண்ணிக்கை கதிரைகளை வழங்குவதற்கு இயலுமாகவிருத்தல் வேண்டும்.

10. மேலதிக விபரங்களை 055-2222048 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**பதுளை.**

**2023-12-04.**

## அஞ்சல் திணைக்களம்

Sri Lanka POST

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்திற்கு ஒவ்வொன்றும் 1000kg, 8 stops & 1.5m/speed ஐயுடைய தற்போதுள்ள இரு பயணியகள் மின்தூக்கிகளை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் (நவீனமயமாக்கல்), பரீட்சித்தல், செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தல்

1. மத்திய அஞ்சல் பரிவர்தனை நிலையத்திற்கு ஒவ்வொன்றும் 1000kg, 8 stops & 1.5m/speed ஐயுடைய தற்போதுள்ள இரு பயணிகள் மின்தூக்கிகளை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் (நவீனமயமாக்கல்), பரீட்சித்தல், செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அஞ்சல் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

3. **2024 ஜனவரி 11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும்** கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுதாரரினாலேயே அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளினால் விலைமனுக்கோரல் ஆவணங்களுக்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 ரூபாவை செலுத்திய பின்னர், எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

4. **2024 ஜனவரி 12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக அனைத்து விலைமனுக்களும் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை மூடும் நேரத்தின் பின்னர் கீழேயுள்ள முகவரியில் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

5. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 77 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

6. இது தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டமானது **2023 டிசம்பர் 20 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு** கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, அஞ்சல் திணைக்கள மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலைய 7 ஆம் மாடியிலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். தளவிஜயமும் இந்த நாளன்றே நடைபெறலாம். விலைமனுதாரர்கள் தேவைப்படும் பரிமாணங்களை விஜயம் செய்து அளவிடும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

7. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் (கோரும் போது பெற்றுக் கொள்ளக்கூடியது) வழங்கப்பட்டதும் **100,000 இலங்கை ரூபா** பெறுமதியானதுமானதும் **2024 ஏப்ரல் 25** ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமானதும் "அஞ்சல் மா அதிபர், அஞ்சல் திணைக்களம்'', என்ற பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.

8. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வேலை நாட்களில் 011 - 4927249 என்ற தொலைபேசி எண்ணினூடாக மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மேலதிக தகவலைப் பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   **கணக்காளர் (பெறுகை),**
   **அஞ்சல் தலைமையகம், தரை மாடி,**
   **இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10.**

9. அஞ்சல் திணைக்கள அஞ்சல் மா அதிபரானவர் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் விலைமனுவொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையைக் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அஞ்சல் திணைக்களம்,**
**இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**

## பெறுகை அறிவித்தல்

# மெதகம பிரதேச சபை

மெதகம பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக 2024.01.01 முதல் 2023.12.30 வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**பெறுகை விண்ணப்பங்கள் விநியோகித்தல் : 2023.12.06 முதல் 2023.12.27 பி.ப. 12.30 வரை**
**பெறுகை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் : 2023.12.27, பி.ப. 1.30 வரை**
**பெறுகை விண்ணப்பங்கள் திறத்தல் : 2023.12.27, பி.ப. 2.00 இற்கு**

- பெறுகை விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை / சாரதி உரிமம் / வெளிநாட்டுக் கடவுச் சீட்டை கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் உறுதி செய்வதற்கு அண்மையில் பெற்றுக்கொண்ட கிராமசேவகர் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
- இந்தச் சபையுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையை மீறியதனால் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டவர்களுக்கு விலைக்கோரல் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.
- பெற்றுக்கொண்ட பெறுகை விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென பெயரிட்டு வெவ்வேறான இரு சிறிய உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அந்த உறைக்கு முத்திரைக் குறி பொறித்து ''தலைவர், மெதகம பிரதேச சபை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் சபையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் இடல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் குத்தகைக்கு எடுப்பதற்கு எதிர்பார்க்கும் ஆதனத்தின் பெயரைக் குறிப்பிட்டு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் சமர்ப்பித்தல் எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- சித்திகரமான பெறுகைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பாதுகாப்பு பிணை வைப்பாக பெறுகையின் முழுப் பெறுமதியில் 3/12 செலுத்தி அன்றே உடன்படிக்கையில் ஒப்பமிடல் வேண்டும். அன்று உடன்படிக்கையில் கையொப்பமிடாத விடத்து முன்பு செலுத்தப்பட்ட பெறுகை பிணை வைப்புத் தொகை சபைக்கு உரியதாக்கப்படும். உடன்படிக்கையில் ஒப்பமிடும்போது பெறுகைத் தொகைக்காக ரூபா ஆயிரம் அல்லது ஒரு பகுதிக்கு ரூபா 10 வீதம் (அதாவது 1%) முத்திரை கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.
- எந்தவொரு பெறுகைப் படிவத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு மெதகம பிரதேச சபை தீர்மானத்தை மேற்கொள்ளும் என்பதுடன், எந்தவொரு பெறுகையையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை பெறுகைக் குழு கொண்டுள்ளது.
- மேலதிக விபரங்களுக்கு 055-2266474 தொ.பே. இலக்கத்திற்கு விசாரித்து அல்லது அலுவலகத்திற்கு வருகைத்தந்து விசாரித்தறியலாம்.

**அட்டவணை**

| | ஆதனத்தின் விபரம் | ஆகக் குறைந்த விலை (வருடாந்தம்) ரூ. சதம் | பெறுகைப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூ. சதம் | பெறுகை பிணை வைப்பு (மீளளிக்கப்படும்) ரூ. சதம் |
|---|---|---|---|---|
| 01 | மெதகம வார சந்தை குத்தகைக்கு விடல் | 4,815,000.00 | 5000.00 | 96,000.00 |
| 02 | மெதகம வார சந்தை இல. 01 கடல் மீன் கடை குத்தகைக்கு விடல் | 1,720,000.00 | 5000.00 | 34,400.00 |
| 03 | மெதகம வார சந்தை இல. 02 கடல் மீன் கடை குத்தகைக்கு விடல் | 1,720,000.00 | 5000.00 | 34,400.00 |
| 04 | மெதகம வார சந்தை நன்னீர் மீன் கடை குத்தகைக்கு விடல் | 460,000.00 | 5000.00 | 9,200.00 |
| 05 | மெதகம வார சந்தை பொது மலசலகூடம் | 50,000.00 | 5000.00 | 1000.00 |
| 06 | மெதகம வார சந்தை கோழி இறைச்சிக்கடை குத்தகைக்கு விடல் | 230,000.00 | 5000.00 | 4,600.00 |
| 07 | மெதகம வார சந்தை பன்றி இறைச்சிக்கடை குத்தகைக்கு விடல் | 575,000.00 | 5000.00 | 11,500.00 |

**2023 டிசம்பர் 06 ஆம் திகதி**
**மெதகம பிரதேச சபை அலுவலகத்தில்.**

**டபிள்யு.எப்.ஏ.எஸ். பண்டார,**
**சபை செயலாளர்**
**மெதகம பிரதேச சபை**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# மீடும் திகதி நீடிப்பு

**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

**விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்**

**விலைமனு இல.: 135/T/2023**

## BOO (கட்டல், உரித்து, இயக்கம்) வடிவத்தின் கீழ் இலங்கையில் விமானநிலைய சரக்கு சமூக முறையை (“ACS”) வடிவமைத்தல், மேம்படுத்தல், செயற்படவைத்தல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் முன்னேற்றுதல்

மேலேயுள்ள விலைமனு தொடர்பாக 2023.11.12 ஆம் திகதியன்று சண்டே ஒப்சேவர் பத்திரிகையிலும் 2023.11.13 ஆம் திகதியன்று டெயிலி நியுஸ், தினமின மற்றும் தினகரன் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கு மேலானது.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியானது 2024 பெப்ரவரி 18 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனையவற்றில் எதுவிதமாற்றமுமில்லை.

**தலைவர்**
**அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**கட்டம் 30, மேற்கு கோபுரம்,**
**உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு-01, இலங்கை**

# பெறுகை அறிவித்தல்

## தேசிய மனநல நிறுவனம் - அங்கொடை

## 2023/2024 ஆம் ஆண்டிற்காக மின் பராமரிப்பு மற்றும் சேவை விடயங்கள் சார்பாக ஒப்பந்தக்காரரை நியமித்துக் கொள்ளல்

தேசிய மனநல நிறுவனம் சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் 2023/2024ம் ஆண்டிற்கு மின் பராமரிப்பு மற்றும் சேவை விடயங்களுக்காக முன் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் இடம்பெறும்.

**தேவையான தகைமைகள்**

1. ICTAD நிறுவனத்தில் EM04 வகுதியின் கீழ் மின் பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தக்காரராக பதிவுசெய்திருத்தல்
2. வேறு வைத்தியசாலையொன்றில் அல்லது சமமான நிறுவனத்தில் மின் பராமரிப்பு விடயங்கள் பற்றிய 03 வருடத்திற்கு குறையாத ஒப்பந்தக்காரராக அனுபவம்
3. ஒரு நாளில் இருபத்திநான்கு (24) மணிநேரமும் தங்கியிருந்து சேவை வழங்குவதற்கு இணங்கியிருத்தல்
4. போக்குவரத்து வசதிகள் மற்றும் தேவையான உபகரணங்கள் தம்மிடம் இருத்தல்

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை, வாரத்தின் வேலை நாட்களில் மாத்திரம் 2024.01.01 முதல் பி.ப.2.00 வரை வைத்தியசாலையின் அலுவலகத்தில் நிர்வாகப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் தலைவர், பிரதேச பெறுகைக்குழு, தேசிய மனநல நிறுவனத்தின் பெயரில், குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் விடுக்கப்படும் எழுத்துமூல வேண்டுதலுடன் மீளளிக்கப்படாத ரூ. 1,500.00 வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளருக்கு செலுத்திய பின்பு பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பிணை ரூ.30,000.00 ஆகும்.

கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி உட்பட இரு பிரதிகளுடன் (02) தயாரித்து 2024.01.02 ஆம் திகதி மு.ப.10.00 இற்கு முன் பதிவுத் தபாலில் அல்லது பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

தொலைபேசி இல : 0112578234 ( நீடிப்பு இல - 252)
பிரதேச பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**தேசிய மனநல நிறுவனம்,**
**முல்லேரியாவ புதிய நகரம்.**

## 1964 இல் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தின்படி திருத்தியமைக்கப்பட்டதன் அமைவாக (460 அத்தியாயம்)

**7. (1) பிரிவின் கீழான நியதி**

**எனது இல .:**
KDS/DEL/4/4/11/1

**காணி அமைச்சின் இலக்கம் .:**
LD/05/2004/PC/106

கீழ் காணப்படும் இப்படிவத்தின்படி விபரப்படுத்தப்பட்டுள்ள காணித்துண்டு அரசிற்கு எடுத்துக்கொள்வதற்காக முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி 2356/03 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியின் 3 ஆம் பகுதியை பார்க்கவும்.

**உபபிரிவு**
கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை பிரதேச செயலகத்தில் கலஹா கிராம அலுவலர் பிரிவில் கலஹா கிராமத்தில் அமைந்துள்ளது.

காணியின் பெயர் : கலஹா தோட்டம்
திட்டத்தின் இல : க.சீ.320706 கது. இல.1

**2023.12.05 தினம்**
**தெல்தோட்டை பிரதேச செயலகத்தில்**

**டீ.ஆர்.கே. ஹென்னாயக்க,**
**பிரதேச செயலாளர்,**
**தெல்தோட்டை.**

Daily News Classifieds, the Housewives' companion

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK
IBRD - IDA | WORLD BANK GROUP

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

IDA Credit No.: 5873 LK

## பெறுகை அறிவித்தல்

### ISP மற்றும் EU கொத்தணிகளுக்கு Poly Mulch, Yellow Sticky மற்றும் Espalier முறைமைகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை ISP மற்றும் EU கொத்தணிகளுக்கு Poly Mulch, Yellow Sticky மற்றும் Espalier முறைமைகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. ISP மற்றும் EU கொத்தணிகளுக்கு Poly Mulch, Yellow Sticky மற்றும் Espalier முறைமைகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ISP பப்பாசி / மிளகாய் கொத்தணிக்கு 600,000 நீள் மீற்றர் Poly Mulch சீட்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA- PMU-366220-GO-RFB | 330,000.00 | 5,000.00 |
| முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ISP வாழை / மிளகாய் கொத்தணிக்கு 550,000 நீள் மீற்றர் Poly Mulch சீட்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA- PMU-366222-GO-RFB | 320,000.00 | 5,000.00 |
| வவுனியா மாவட்டத்திலுள்ள ISP பப்பாசி / மிளகாய் கொத்தணிக்கு 550,000 நீள் மீற்றர் Poly Mulch சீட்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA- PMU-366227-GO-RFB | 320,000.00 | 5,000.00 |
| யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உருளைக்கிழங்கு கொத்தணிக்கு 126,000 எண்ணிக்கையான Yellow Sticky Cards | LK-MOA- PMU-353106-GO-RFB | 360,000.00 | 5,000.00 |
| மாத்தளை மாவட்டத்திலுள்ள கொய்யா கொத்தணிக்கு 50 எண்ணிக்கையான Espalier முறைமைகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல். | LK-MOA-PMU-373334-GO-RFB | 750,000.00 | 15,000.00 |
| மாத்தளை மாவட்டத்திலுள்ள மாம்பழ கொத்தணிக்கு 50 எண்ணிக்கையான Espalier முறைமைகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல். | LK-MOA-PMU-373333-GO-RFB | 750,000.00 | 15,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-12-08ஆம் திகதியிலிருந்து 2023-12-29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2023-12-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2023-12-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகைதந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ‘‘ ISP மற்றும் EU கொத்தணிகளுக்கு Poly Mulch, Yellow Sticky மற்றும் Espalier முறைமைகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 2023-12-08**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK
IBRD - IDA | WORLD BANK GROUP

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

IDA Credit No.: 5873 LK

## பெறுகை அறிவித்தல்

### நீர்ப்பாசன முறைமைகள், மின்சார நீர்ப் பம்பிகள் மற்றும் பதப்படுத்தல் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை நீர்ப்பாசன முறைமைகள், மின்சார நீர்ப் பம்பிகள் மற்றும் பதப்படுத்தல் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. நீர்ப்பாசன முறைமைகள், மின்சார நீர்ப் பம்பிகள் மற்றும் பதப்படுத்தல் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழை/ மிளகாய் கொத்தணிக்கு 150 எண்ணிக்கையான Drip முறைமைகள் சகிதம் குறைந்த அழுத்தமுள்ள மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-351718-GO-RFB | 1,170,000.00 | 15,000.00 |
| மொனராகலை மாவட்டத்திலுள்ள மிளகாய் கொத்தணிக்கு 200 எண்ணிக்கையான Drip tape முறைமைகள் | LK-MOA-PMU-353402-GO-RFB | 650,000.00 | 10,000.00 |
| மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழை/ மிளகாய் கொத்தணிக்கு 150 எண்ணிக்கையான மின்சார நீர்ப் பம்பிகள் | LK-MOA-PMU-351710-GO-RFB | 252,000.00 | 5,000.00 |
| வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், மாம்பழ பதப்படுத்துதல் நிலையத்திற்கான பதப்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-314432-GO-RFB | 330,000.00 | 7,500.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-12-08ஆம் திகதியிலிருந்து 2023-12-29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2023-12-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2023-12-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகைதந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ‘‘ நீர்ப்பாசன முறைமைகள், மின்சார நீர்ப் பம்பிகள் மற்றும் பதப்படுத்தல் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி : 0112696086 அல்லது 0777419521**
**திகதி : 2023-12-08**

# 25 ஆண்டுகளின் பின் மேற்கிந்திய அணிக்கு ஒருநாள் தொடர் வெற்றி



மேற்கிந்திய தீவுகள் அணி 25 ஆண்டுகளில் முதல் முறையாக சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் வெற்றியீட்டியுள்ளது.

பிரைட்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியதன் மூலமே மேற்கிந்திய தீவுகள் அணி 2–0 என தொடரை கைப்பற்றியது. இது 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர் ஒன்றை வெல்வது முதல் முறையாகவும் இருந்தது.

இதில் மழையால் 40 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி 40 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களையே பெற்றது. மத்திய வரிசையில் பென் டக்கட் 71 ஓட்டங்களை குவித்தார்.

மழை காரணமாக 34 ஓவர்களுக்கு 188 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணி 31.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

அண்மையில் நடந்த உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதி பெறாத மேற்கிந்திய தீவுகள் 1998 ஆம் ஆண்டிலேயே சொந்த மண்ணில் இங்கிலாந்தை தொடர் ஒன்றில் வென்றது.

# ஆசிய கிண்ணம்: இலங்கை இளையோர் வெற்றி ஆரம்பம்



ஜப்பானுக்கு எதிரான 19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ணத் தொடரின் முதல் குழுநிலை போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியது.

டுபாயில் நேற்று முன்தினம் (09) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஜப்பான் அணி 30.3 ஓவர்களில் 75 ஓட்டங்களுக்கே சுருண்டது.

பந்துவீச்சில் மல்ஷ தருப்பதி 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு கருக சங்கேத் 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை இளையோர் அணி 12.2 ஓவர்களிலேயே 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 76 ஓட்டங்களை எட்டியது. அதிகபட்சமாக அணித் தலைவர் சினெத் ஜனவர்தன ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களை பெற்றார்.

எட்டு அணிகள் பங்கேற்றுள்ள இளையோர் ஆசிய கிண்ணப் போட்டியில் பி குழுவில் ஆடும் இலங்கை அணி இன்று (11) தனது இரண்டாவது போட்டியில் ஐக்கிய அரபு இராச்சியத்தை எதிர்கொள்ளவுள்ளது.

# மகளிர் பிரீமியர் லீக்கில் சமரி விலைபோகவில்லை



இந்தியாவின் மகளிர் பிரீமியர் லீக் தொடருக்கான வீராங்கனைகளின் ஏலத்தில் இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்து விலைபோகவில்லை.

அண்மையில் நடந்த அவுஸ்திரேலிய பிக் பாஷ் தொடரில் திறமையை வெளிப்படுத்தி தொடர் நாயகி விருதை வென்றபோதும் 30 இலட்சம் அடிப்படை விலைக்கு மகளிர் பிரீமியர் லீக் ஏலத்தில் போட்டியிட்ட சமரியை எந்த அணியும் வாங்க முன்வரவில்லை.

'டீன்ட்ரா டொட்டின் மற்றும் சமரி அத்தபத்து ஏலம் போகாதது தொடர்பில் எல்லோரையும் போல் நானும் குழப்பம் அடைந்தேன். ஐந்து அணிகளும் சரியாக செயற்பட்டு ஏலம் எடுக்கவில்லை' என்று இந்தியாவின் பிரபல வர்ணனையாளர் ஹர்ஷா போக்லி எக்ஸ் சமூக ஊடகத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த சனிக்கிழமை நடந்த ஏலத்தில் 2024 மகளிர் பீரிமியர் லீக் தொடருக்காக மொத்தம் 165 வீராங்கனைகள் ஏலம் விடப்பட்டிருந்தனர்.

இதில் அனுபவமற்ற இந்திய வீராங்கனை கஷ்வீ கௌதம் இந்திய நாணயப்படி 2 கோடிக்கு ஏலம் போனார். அதேபோன்று அவுஸ்திரேலிய சகலதுறை வீராங்கனை அன்னெபில் சதர்லாண்ட்டை டெல்லி கெப்பிடல்ஸ் அணி 2 கோடி ரூபாவுக்கு வாங்கியது.

# சர்வதேச செய்திகள்

## பருவநிலை மாநாட்டில் தொடர்ந்தும் முரண்பாடு



டுபாயில் நடைபெறும் COP28 பருவநிலை மாநாட்டில் நாடுகளுக்கு இடையே கருத்து வேறுபாடு தொடர்கிறது.

பூமியை வாட்டும் பருவநிலை மாற்றத்தைச் சமாளிக்க ஒன்றுபட்டுச் செயல்பட முடியாமல் உலக நாடுகள் தடுமாறுகின்றன. உச்சநிலை மாநாடு முடிவடைய இன்னும் 2 நாட்களே உள்ளன.

ஆனால் கருத்தொற்றுமை இல்லை. புதைபடிவ எரிபொருள் தொடர்பாக உலகத் தலைவர்கள் மோதிக்கொள்கின்றனர். டுபாய் COP28 மாநாட்டின் தலைவர் சுல்தான் அல்ஜாபிர் சில நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் உலகத் தலைவர்களிடையே இணக்கத்தை விடவும் கருத்து வேறுபாடே அதிகம் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பாரம்பரிய புதைபடிவ எரிபொருளைப் படிப்படியாகக் கைவிட வேண்டும் என்ற வேண்டுகோளை உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளான சவூதி அரேபியாவும் ரஷ்யாவும் எதிர்க்கின்றன. COP28 இறுதி அறிக்கையில், என்ன தான் சொல்கிறீர்கள் என்பதைத் தெளிவாகக் கூறுங்கள் என்று 80க்கும் அதிகமான உலக நாடுகள் கேட்கின்றன.

## தொன் கணக்கில் ஒதுங்கிய மீன்கள்



ஜப்பானின் ஹொக்காய்டோவில் உள்ள டொய் மீன்பிடித் துறைமுகத்தில் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்குக் கடற்கரை எங்கும் தொன் கணக்கில் இறந்த மீன்கள் ஒதுங்கியுள்ளன.

'சார்டின்' எனப்படும் மத்தி மீன்களும் கானாங்கெளுத்தி மீன்களும் கரை ஒதுங்கிய சம்பவம் உள்ளூர் மீனவர்களைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

திடீரென்று மீன்களுக்குச் சுவாச வாயு போதாமல் போயிருக்கலாம் என்ற ஊகம் எழுந்துள்ளது. இவ்வாறு நடந்ததற்குக் காரணம் என்ன, மீன்களை எவ்வாறு அகற்றுவது என மாநில அரசாங்கம் விசாரணை மேற்கொண்டு வருகிறது.

குறைந்தது 1,000 தொன்கள் இவ்வாறு கரை ஒதுங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மணலால் மூடப்பட்ட அந்த மீன்களைச் சாப்பிடக்கூடாது என்று எச்சரிக்கையும் மக்களுக்கு விடுக்கப்பட்டது. இதற்கிடையே, குளிர்ந்த பகுதிக்குள் வந்ததனால் மீன்கள் இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் இறந்திருக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.



## 5000 இஸ்ரேலிய படையினர் காயம்

காசாவில் போர் வெடித்த கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி தொடக்கம் 5,000க்கும் அதிகமான இஸ்ரேலிய படையினர் காயமடைந்திருப்பதாகவும் மனநல நெருக்கடி நிலை ஒன்று அதிகரித்து வருவதாகவும் இஸ்ரேலிய அதிகாரிகள் எச்சரித்திருப்பதாக இஸ்ரேலிய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஒவ்வொரு நாளும் காயமடைந்த சுமார் 60 படை வீரர்கள் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சின் புனர்வாழ்வு திணைக்களத்திற்கு வருவதாக அந்த அமைச்சின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் குறைந்தது 2,000 இஸ்ரேலிய படையினர் உடல் வலுவீனர்களாக அறிவிக்கப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு திணைக்கள பிரதிப் பணிப்பாளர் நாயகம் லிமோர் லூரியா, 'யேடியோத் அஹ்ரோனொத்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். காயமடைந்துள்ள புதிய படையினரை அனுமதிப்பதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் காயமடைந்தவர்களை வெளியேற்றுவதை சுகாதார அதிகாரிகள் விரைவுபடுத்தி இருப்பதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'இதற்கு முன்னர் நாம் இப்பாடியான ஒரு நிலையை சந்தித்ததில்லை' என்று கூறிய லூரியா, போர் ஆரம்பித்தது தொடக்கம் 5,000 படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களில் சுமார் 60 வீதத்தினர் கைகள் மற்றும் கால்களில் மோசமான காயத்தை சந்தித்திருப்பதாகவும் பலருது உடல் பாகங்களை நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் லூரியோ குறிப்பிட்டார்.

சுமார் 12 வீத காயங்கள் மண்ணீரல், சிறுநீரகம் மற்றும் உள் உறுப்புகளின் சிதைவு போன்றவற்றால் ஏற்பட்டிருப்பதாக அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி தொடக்கம் குறைந்தது 420 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவின் 'விட்டோ'வை அடுத்து தெற்கு காசாவில் தாக்குதல்கள் தீவிரம்

## மனிதாபிமான 'பேரழிவு' பற்றி எச்சரிக்கை



தெற்கு காசாவில் இஸ்ரேலியப் படை நேற்று (10) குண்டுத் தாக்குதல்களை தீவிரப்படுத்தி பலஸ்தீன போராளிகளுடன் கடும் மோதலில் ஈடுபட்ட நிலையில் அங்குள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தாக்குதலில் இருந்து தப்புவதற்கு பாதுகாப்பான இடங்களை தேடி வெளியேறி வருகின்றனர்.

காசா பகுதியில் நோய் மற்றும் பட்டினி அதிகரித்து வரும் நிலையில் பேரழிவு கொண்ட மனிதாபிமான நெருக்கடி ஒன்று பற்றி உதவிக் குழுக்கள் எச்சரித்துள்ளன.

இஸ்ரேலிய துருப்புகள் தெற்கு நகரான கான் யூனிஸ் மற்றும் அங்கிருந்து எகிப்துடனான எல்லையை ஒட்டிய ரபா செல்லும் பாதையை இலக்கு வைத்து கடும் தாக்குதல்களை நடத்துவதாக காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

கான் யூனிஸுக்கு அருகில் ஹமாஸ் மற்றும் பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் போராளிகள் இஸ்ரேலிய படைகளுடன் நேற்று கடும் மோதலில் ஈடுபட்டு வந்ததாக அந்த போராட்டக் குழுக்களை மேற்கோள் காட்டி ஏ.எப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் போரில் காசாவில் குறைந்தது 17,700 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் முன்னெப்போதும் இல்லாத அளவு பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தி சுமார் 1200 பேர் வரை கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து ஹமாஸ் அமைப்பை அழித்தொழிக்கப்போவதாக இஸ்ரேல் சூளுரைத்துள்ளது.

காசாவில் தொடர்ந்து 137 பணயக்கைதிகள் இருப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

காசாவில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பு பெறுவதற்கு சிறிய அளவான தேர்வுகளே இருக்கும் நிலையில் கணிசமானவர்கள் மருத்துவமனைகளில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

இஸ்ரேலின் தாக்குதல்களால் கடும் சேதத்திற்கு உள்ளாகி இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் வடக்கில் உள்ள காசா நகரில் இருக்கும் அல் ஷிபா மருத்துவமனையில் அயிரக்கணக்கான மக்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

அந்த மருத்துவமனையின் மூற்றவெளிகள் மற்றும் தோட்டங்களில் கட்டட இடிபாடுகளுக்கு மத்தியிலும் சாதாரண துணிகளால் அமைக்கப்பட்ட கூடாரங்களில் மக்கள் வசித்து வருகின்றனர்.

இஸ்ரேலிய விமானங்கள் மற்றும் டாங்கிகள் கடுமையாக குண்டு வீசி வருவதால் இங்கு வந்ததாக காசா நகரின் ஷஜையா பகுதியைச் சேர்ந்த 56 வயது சுஹைல் அபூடல்பா தெரிவித்தார்.

'அது பயங்கரமாக இருந்தது. ஷெல் குண்டு ஒன்று வீட்டில் விழுந்து எனது 20 வயது மகன் காயமடைந்தான்' என்று அவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார். 'நாம் பழைய நகருக்குச் சென்றோம் அங்கே எல்லாவற்றின் மீதும் தாக்குதல் நடத்தி அழிக்கப்பட்டிருந்தன. எமக்கு எங்கே செல்வது என்று தெரியவில்லை' என்றும் அவர் குறிப்பிட்டார். 'அவர்கள் (இஸ்ரேல்) மீண்டும் மருத்துவமனைக்குள் வருவார்களா என்பது எமக்குத் தெரியவில்லை' என்றார். மத்திய காசாவின் அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனைக்கு 24 மணி நேரத்திற்குள் 71 உடல்கள் வந்ததாக அந்தப் பகுதியின் சுகாதார நிர்வாகம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

தெற்கு பகுதியின் கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவமனைக்கு 62 சடலங்கள் வந்ததாக சுகாதார நிர்வாகம் கூறியது.

மருத்துவமனைக்குள் குழந்தைகள் உட்பட மற்றவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக தரையில் காத்திருக்கும் நிலையில் வெளியே இஸ்ரேலிய தாக்குதலால் எரிந்த கட்டடம் ஒன்றை அணைக்கு பணியில் தீயணைப்பாளர்கள் ஈடுபட்டு வந்ததாக அங்குள்ள ஏ.எப்.பி செய்தியாளர் விபரித்துள்ளார்.

'நிலைமை பேரிடம் மாத்திரமல்ல பேரழிவு கொண்டது' என்று ஒக்ஸ்பாம் அமைப்பின் புஷ்ரா காலிதி குறிப்பிட்டுள்ளார். இதேவேளை காசா மக்களில் பாதிப்பேர் பட்டினியில் வாடுவதாக ஐக்கிய நாடுகள் நிறுவனம் கூறியுள்ளது.

உலக உணவுத்திட்டப் பிரிவின் துணை பணிப்பாளர் கார்ல் ஸ்காவ் காசாவுக்கு நேரடிப் பயணத்தை மேற்கொண்ட பின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகத் தெரிவித்தார். சற்றும் எதிர்பாராத பயம்,



குழப்பம், துயரத்தைப் பார்த்ததாக அவர் குறிப்பிட்டார். காசாவின் சில வட்டாரங்களில் 10இல் 9 பேர் தினசரி சாப்பாடு இல்லாமல் தவிப்பதாக ஸ்காவ் கூறினார்.

காசாவில் தற்போதிருக்கும் நிலைமையில் உணவை விநியோகம் செய்வது கிட்டத்தட்ட சாத்தியமே இல்லை என்று அவர் கூறியதாக பி.பி.சி செய்தி நிறுவனம் தெரிவித்தது. எகிப்து எல்லையோரம் இருக்கும் ரபா பாதையில்தான் தற்போது காசாவுக்கு உணவு செல்கிறது. அதேபோன்று இன்னொரு பாதையைத் திறக்க வேண்டும் என்று உலக உணவுத் திட்டப் பிரிவு கேட்கிறது.

### சிறுவர்களுக்கான மரண தண்டனை

காசாவின் 2.4 மில்லியன் மக்கள் தொகையில் 1.9 மில்லயன் மக்கள் தற்போது இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த குறுகலான நிலப்பகுதியில் இருந்து மக்கள் வெளியேற முடியாது முடக்கப்பட்டிருக்கும் நிலையில் எகிப்து எல்லைக்கு அருகாமையில் உள்ள ரபாவில் மக்கள் பாரிய அளவில் அடைக்கலம் பெற்று வருகின்றனர்.

இந்த மோதலால் சுமார் ஒரு மில்லியன் சிறுவர்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் ஏற்கனவே அறிவுறுத்திய நிலையில் தெற்கு காசாவில் மோதல் தீவிரம் அடைந்திருப்பதால் சிறுவர்களுக்கான பாதுகாப்பான இடங்கள் அங்கு தீர்ந்து வருகின்றன. 'அவர்கள் மேலும் மேலும் தெற்காக குடிநீர், உணவு அல்லது பாதுகாப்பு இல்லாத மக்கள் நிரம்பி இருக்கும் சிறிய பகுதிக்குள் சுருங்கியுள்ளனர். இதனால் சுவாசத் தொற்று மற்றும் நீர் மூலம் பரவக்கூடிய நோய்கள் அதிகரிக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது' என்று யுனிசெப் நிறுவனத்தின் அதெல் கோதிர் தெரிவித்துள்ளார்.

'காசா பகுதிக்கு செல்லும் உயிர்காக்கும் உதவிகளை வழங்குவதில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளும் சவால்களும் குழந்தைகளுக்கான மற்றொரு மரண தண்டனையாகும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

காசாவில் இராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்துவதாக இஸ்ரேலிய இராணுவத் தளபதி குறிப்பிட்டிருப்பது அங்கு மனிதாபிமான நெருக்கடியை மேலும் அதிகரிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் காசாவில் இஸ்ரேலிய துருப்புகள் தொடர்ந்து கடும் எதிர்ப்பை சந்தித்து வரும் நிலையில் அங்கு கொல்லப்பட்ட இஸ்ரேலிய வீரர்களின் எண்ணிக்கை 93 ஆக உயர்ந்துள்ளது. பணயக்கைதிகளை மீட்கும் முயற்சிகளும் தோல்வி அடைந்து வரும் நிலையில் இஸ்ரேலிய தாக்குதல்களால் 25 வயது சஹர் பீரி என்ற பணயக்கைதி கொல்லப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு தெரிவத்துள்ளது.

### அமெரிக்காவின் வீட்டோவால் பதற்றம்

போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஐ.நா பாதுகாப்புச் சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி நிராகரித்தது. இந்தத் தீர்மானம், உண்மை சூழலில் இருந்து வேறுபட்டிருப்பதாகவும் காசாவில் ஹமாஸ் அதிகாரத்தில் நீடிப்பதற்கு உதவும் என்றும் அமெரிக்க தூதுவர் ரொபட் வூட் இதன்போது கூறியிருந்தார்.

அமெரிக்காவின் வீட்டோவை மனிதாபிமானமற்றது என ஹமாஸ் அரசியல் பிரிவு உறுப்பினர் இஸாத் அல் ரெஷிக் விபரித்துள்ளார். 2007 இல் காசாவில் ஹமாஸிடம் அதிகாரத்தை இழந்த பலஸ்தீன அதிகாரசபையின் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், இந்த வீட்டோ மூலம் இஸ்ரேலின் போர் குற்றங்களுக்கு அமெரிக்கா உடைந்தையாகியுள்ளது என்றார்.

மறுபுறம் அமெரிக்காவின் வீட்டோவை வரவேற்றிருக்கும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'ஹமாஸை ஒழிக்கும் போரை இஸ்ரேல் தொடர்ந்து முன்னெடுக்கும்' என்றார்.

எனினும் வீட்டோ பயன்படுத்தப்பட்டிருப்பது பிராந்தியத்தில் கட்டுப்படுத்த முடியாத சூழலை ஏற்படுத்தும் என்று ஹமாஸ் அமைப்பு ஆதரவான ஈரான் எச்சரித்துள்ளது.

காசாவுக்கு உணவு மற்றும் மருந்துகள் அனுமதிக்கப்படும் வரையில் இஸ்ரேலிய துறைமுகங்களை நோக்கிச் செல்லும் அனைத்து கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தப்போவதாக ஈரான் ஆதரவு யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் சனிக்கிழமை (09) எச்சரித்தனர்.

இதேவேளை செங்கடலில் இரண்டு ஆளில்லா விமானங்களை தமது போர் கப்பல்களில் ஒன்று சுட்டு வீழ்த்தியதாக பிரான்ஸ் இராணுவம் நேற்று கூறியது. அந்த ஆளில்லா விமானங்கள் யெமன் துறைமுகத்தில் இருந்து கப்பலை நோக்கி வந்ததாக அது கூறியது.

அதேபோன்று இஸ்ரேல் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையில்



தொடர்ந்து நீடிக்கும் மோதல்கள் பிராந்தியத்தில் பரந்த அளவில் மோதல் ஒன்றை தூண்டும் அச்சுறுத்தலை அதிகரித்துள்ளது. லெபனானில் இருந்து இடம்பெற்ற தாக்குதல்களுக்கு பதிலடி கொடுத்தாக இஸ்ரேல் இராணுவம் சனிக்கிழமை கூறியிருந்தது.

தெற்கு லெபனானில் உள்ள ஐ.நா அமைதிகாக்கும் நிலை ஒன்றின் மீதும் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டதாக ஐ.நா படை குறிப்பிட்டுள்ளது. எனினும் அந்தத் தாக்குதல் எங்கிருந்து வந்தது என்பது பற்றி விசாரணை நடத்தி வருவதாக அது கூறியது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையிலும் வன்முறை அதிகரித்துள்ளது. கடந்த சனிக்கிழமை இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதல்களில் மேலும் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று முன்தினம் கூறியது.

## குட்டரஸ் தொடர்ந்து முயற்சி



காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை கொண்டு வர ஐ.நா பாதுகாப்புச் சபை தவறியதற்கு வருத்தத்தை தெரிவித்த ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ், பாதுகாப்புச் சபை முடங்கி இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கட்டாரில் நடைபெறும் டோஹா மாநாட்டில் உரையாற்றிய குட்டரஸ், பாதுகாப்புச் சபையின் அதிகாரம் மற்றும் திறன் குறைமதிப்புக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறியதோடு, 'நான் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதை உறுதியாகக் கூறுகிறேன்' என்றும் உறுதி அளித்தார். காசாவில் அவசர போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் பாதுகாப்புச் சபை தீர்மானத்தின் மீதே அமெரிக்கா கடந்த வெள்ளிக்கிழமை வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியது. அந்தத் தீர்மானம் அபாயகரமான மற்றும் யதார்த்தபூர்வமற்றது என்று அது கூறியது.

ஐ.நா சானத்தில் தனக்கு இருக்கும் விசேட அதிகாரத்தை பயன்படுத்தியே குட்டரஸ் போர் நிறுத்த தீர்மானத்தை பாதுகாப்பு சபைக்கு கொண்டுவந்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.